இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 150 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 24 – செவ்வாய்க்கிழமை 09 ஜனவரி 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 150 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 24 - Tuesday 09 January 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்

# முதல் நாளிலேயே முதலீடு ரூ.5.5 லட்சம் கோடி குவிந்தது!

## தமிழ்நாடு வரலாற்றிலேயே தொழில் துறை வளர்ச்சியில் இதுவரை காணாத மிகப்பெரிய முன்னேற்றம்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”யை தொடங்கி வைத்து, விழா பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன. 9 -**

**“உலக முதலீட்டாளர் மாநாட்டில் முதல் நாளிலேயே முதலீடு ரூ.5.5 லட்சம் கோடி குவிந்தது. தமிழ்நாடு வரலாற்றிலேயே தொழில் துறை வளர்ச்சியில் இதுவரை காணாத மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”யை தொடங்கி வைத்தார். விழாவில் தலைமையுரை ஆற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் நிலவும் சிறந்த தொழில் சூழல் பற்றி எடுத்து கூறினார்.

### புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் டாடா எலெக்ட்ரானிக்ஸ், பெகட்ரான், டி.வி.எஸ். குழுமம், மிட்சுபிஷி, ஏ.பி. மோலார் மெர்ஸ்க், ஹூண்டாய், JSW, அசோக் லேலண்ட் மற்றும் வின்பாஸ்ட் ஆகிய முக்கிய நிறுவனங்களின் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

### கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கை வெளியீடு

தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024 மற்றும் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வெளியிட்டார்.

**நிறுவனங்களின் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

அதனைத் தொடர்ந்து, க்வால்காம் டிசைன் சென்டர் மற்றும் ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனங்களின் திட்டங்களை தொடங்கி வைத்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

**உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பன்னாட்டு மற்றும் முன்னணி நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள்**

இந்நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறு வனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

மேலும், ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானி அவர்கள் காணொலி வாயிலாக உரையாற்றினார். தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியினை தெரிவித்தார்.

### எந்த நிறுவனம் எவ்வளவு முதலீடு!

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல்வேறு நிறுவனங்கள் கோடிகளைக் கொட்டி முதலீடு செய்துள்ளன. எந்தெந்த நிறுவனங்கள் எவ்வளவு முதலீடு செய்துள்ளன என்பது பற்றிய விவரம் வருமாறு:

1. **ரிலையன்ஸ் ஜியோ ரூ.35 ஆயிரம் கோடி** முதலீடு (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆலை)

2. **கோத்ரேஜ் நிறுவனம் ரூ.515 கோடி** முதலீடு (செங்கல்பட்டில் உற்பத்தி மையம்) 446 பேருக்கு வேலை.

3. **டாடா எலெக்ட்ரானிக்ஸ் ரூ. 12 ஆயிரத்து 82 கோடி** முதலீடு (கிருஷ்ணகிரியில் செல்போன் உற்பத்தி மையம்) 40 ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

4. **பெகட்ரான் ரூ.1000 கோடி** (நுகர்வோர் மின்னணு சாதனங்கள் உற்பத்தி மையம்)8 ஆயிரம் பேருக்கு வேலை.

5. **வே.எஸ். டபிள்யூ ரூ.12 ஆயிரம் கோடி** (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் நெல்லை தூத்துக்குடி மாவட்டங்களில் 6,600 பேருக்கு வேலை)

6. **டி.வி.எஸ். குழுமம் ரூ.5 ஆயிரம் கோடி** (தமிழ்நாடு முழுவதும் திட்டங்கள் 500 பேருக்கு வேலைவாய்ப்பு)

7. **சீன நாட்டின் மிட்சுபிஷி நிறுவனம் ரூ.200 கோடி** (கும்மிடிப்பூண்டியில் மோட்டார் தொழிற்சாலை தொடங்கப்பட உள்ளது)

8. வியட்நாம் நாட்டின் முன்னணி மின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான **வின்பாஸ்ட் ரூ.16 ஆயிரம் கோடி** (தூத்துக்குடியில் தொழிற்சாலை அமைகிறது)

9. **ஹூண்டாய்ரூ.6 ஆயிரம் கோடி** (காஞ்சிபுரத்தில் பெட்ரோலிய மின்சார வாகன கார் பேட்டரி தயாரிப்பு நிறுவனம் தொடங்கப்படுகிறது)

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

---

## தொழில்துறை வரலாற்றில் மகத்தான அத்தியாயம் இந்த மாநாடு ! - தமிழ்நாட்டில் குவியும் தொழில் முதலீடுகளால்

# 1 லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை அடைவோம் !

## உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி !

**சென்னை, ஜன.9-**

**உலக முதலீட்டாளர்கள் இரண்டு நாள் மாநாட்டை நேற்று முன்தினம் துவக்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் தொழில்துறை வரலாற்றில் மகத்தான அத்தியாயமாக இந்த மாநாடு அமையும் எனவும், தமிழ்நாட்டில் குவியும் தொழில் முதலீடுகளால் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை அடைவோம் எனவும் உறுதிபடக் கூறினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”யை தொடங்கி வைத்து, ஆற்றிய விழாப் பேருரை வருமாறு:–

பொதுவாக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது தான் நான் சூட் போடுவது வழக்கம். ஆனால் இங்கு எல்லா வெளிநாடுகளும் தமிழ்நாட்டிற்குள் வந்து விட்ட காரணத்தால், இங்கே நான் கோட் சூட் அணிந்து வந்திருப்பது பொருத்தமாக உள்ளது. இன்று காலையிலிருந்து சென்னையில் மழை பெய்து கொண்டிருக்கிறது. நான் இங்கு வந்தவுடன், முதலீடும் மழையாக பெய்யும் என்ற நம்பிக்கை எனக்கு வந்துள்ளது.

### தனித்த தொழில்வளம் கொண்ட தமிழ்நாடு!

உலகம் முழுவதும் இருந்து வந்திருக்கும் எனது அருமை சகோதர, சகோதரிகளே! நீங்கள் அனைவரும் சமத்துவத்தைப் போற்றிய வள்ளுவரும், கணியன் பூங்குன்றனாரும் பிறந்த மண்ணுக்கு வந்திருக்கிறீர்கள். பல வரலாற்றுப் பெருமைகளையும், புகழையும் கொண்ட தமிழ்நாட்டுக்கு வருகை தந்திருக்கிறீர்கள். உங்கள் அனைவரையும் நான் வரவேற்கிறேன். இந்த மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமின்றி, உங்கள் சகோதரனாக வருக, வருக, வருக என நான் வரவேற்கிறேன்.

## ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு இந்த இரண்டரையாண்டில் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய மாநிலம் தமிழ்நாடு!

தொழில் துறையில் மேன்மையும், தனித்த தொழில்வளமும் கொண்ட மாநிலம்தான், தமிழ்நாடு! பண்டைய காலத்தில் இருந்து கடல் கடந்தும் வாணிபம் செய்தவர்கள்! அதனால்தான், “திரை கடல் ஓடியும் திரவியம் தேடு – என்று தொழிலை ஊக்குவிக்கும் பழமொழி உருவானது! இந்தியாவுக்கு பல்வேறு வகைகளில் தமிழ்நாடு, முன்மாதிரி மாநிலம்! 1920–ஆம் ஆண்டு ‘தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு’ எனப்படும் தொழிலதிபர்கள் அமைப்பு தொடங்கப்பட்டது. இதனால் தான், தமிழ்நாடு அனைத்து வகைத் தொழில்களிலும், முன்னேறிய மாநிலமாக இன்றைக்கு இருக்கிறது.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற மாநிலமாக இருப்பதால், இதற்கான திறமையான தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக கிடைத்தார்கள். சிறந்த தொழில் அதிபர்களும், திறமையான தொழிலாளர்களும் நிறைந்த தமிழ்நாட்டுக்கு, உலகத் தொழில் முனைவோரான நீங்கள் வந்திருக்கிறீர்கள். நாங்கள் விடுத்த அழைப்பை ஏற்று வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதுடன் எனது உளமார்ந்த நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஒன்றிய தொழில்துறை அமைச்சர் பியுஷ் கோயலை நெஞ்சார வரவேற்கிறேன்!

இந்த மாநாட்டிற்கு தலைமையேற்க வந்திருக்கும் ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியுஷ் கோயல் அவர்களை நான் நெஞ்சார வரவேற்கிறேன். பியுஷ் கோயல் அவர்களது குடும்பம் அரசியல் குடும்பம். அப்பா, அம்மா இரண்டு பேருமே அரசியலில் கோலோச்சியவர்கள். வங்கித் துறை பணியாளராக வாழ்க்கையை தொடங்கி நிதி மற்றும் வர்த்தக துறையில் தனித்துவம் படைத்தவர் பியுஷ் கோயல் அவர்கள். அவர் இங்கு வந்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்திருக்கிறார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – அரசு அதிகாரிகளை பாராட்டுகிறேன்!

இந்த மாநாட்டை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களையும் – தொழில் துறை செயலாளர் அருண்ராய் அவர்களையும் – அனைத்துத் துறைகளைச் சார்ந்த அதிகாரிகளையும் – அரசு உயர் அலுவலர்களையும் என அனைவரையும் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

### 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாக இணைந்துள்ளன!

உலக நாடுகளை உள்ளடக்கிய இந்த நிகழ்வில், அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய 9 நாடுகள் எங்களுடன் பங்குதாரர் நாடுகளாக இணைந்துள்ளன.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 09-01-2024

# ‘செபி’ நேர்மையாக விசாரிக்கட்டும்!

‘அதானி குழுமம் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்க வேண்டும் என்று போடப்பட்ட மனுவை நிராகரித்திருக்கிறது உச்சநீதிமன்றம். அதானி வழக்கை ‘செபி’ அமைப்பே விசாரிக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இந்த தீர்ப்பை அதானி வரவேற்று இருக்கிறார்.

**“இந்த தீர்ப்பின் மூலமாக உண்மை வெற்றி பெற்றுள்ளது. எங்களுக்குத் துணை நின்ற அனைவர்க்கும் நன்றி. இந்தியாவின் வளர்ச்சிக்கு எங்களது பங்களிப்பு தொடரும்” என்று அதானி தனது மகிழ்ச்சியை வெளியிட்டு இருக்கிறார். ‘அதானி தவறே செய்யவில்லை’ என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளிக்கவில்லை. ‘அவர் மீதான விசாரணையை செபி அமைப்பானது செய்யலாம்’ என்றுதான் உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது. எனவே, உடனடி மகிழ்ச்சி அடைய எதுவும் நடந்து விடவில்லை.விசாரணையின் இறுதி முடிவுகள் வரும் வரை அதானி காத்திருக்கத் தான் வேண்டும்.**

‘செபி’ எனப்படுவது இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் ஆகும். பங்குச் சந்தைகள், நிதிச் சந்தைகளை ஒழுங்குபடுத்தும் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகும். 1988 ஆம் ஆண்டு இது உருவாக்கப்பட்டாலும், 1992 ஆம் ஆண்டு தான் ‘செபி சட்டம்’ உருவாக்கப்பட்டது. பங்குச் சந்தைகளை கட்டுப்படுத்தும் அமைப்பாக இது செயல்பட்டாலும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் அமைப்பு தான் இது. ஒன்றிய நிதி அமைச்சக அதிகாரிகள், சட்ட அமைச்சக அதிகாரிகள் இதில் இருப்பார்கள். ஐந்து உறுப்பினர்களை நியமிப்பதும் ஒன்றிய அரசு தான். ரிசர்வ் வங்கி அதிகாரி ஒருவர் இதில் இருப்பார். ஒன்றிய அரசின் நிதியில் இருந்து தான் இந்த அமைப்பே செயல்படுகிறது. ஒன்றிய அரசின் மானியத்தில் தான் இது இயங்குகிறது. செபி வாரியத்தின் தலைவரையோ, உறுப்பினர்களையோ எப்போதும் நீக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கே உண்டு. செபி, தனது ஒவ்வொரு செயலுக்கும் ஒன்றிய அரசின் அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் தொங்கு சதையாக இருக்கும் ஒரு அமைப்பு, அதானி மீதான குற்றச்சாட்டை நேர்மையாக விசாரிக்குமா? என்பது சந்தேகத்துக்குரியதே!

அதானி மீதான குற்றச்சாட்டுகளை ஏற்கனவே செபி விசாரித்தது. எந்தத் தவறும் அதானி செய்யவில்லை என்று செபியும் சொல்லி விட்டது. அதே செபி தான் மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது உச்சநீதிமன்றம்.

அதானி மீதான குற்றச்சாட்டுகள் என்பவை தனிப்பட்ட ஒரு தொழில் அதிபர் மீதான குற்றச்சாட்டுகள் அல்ல, தனிப்பட்ட ஒரு தொழில் நிறுவனத்தின் மீதான குற்றச்சாட்டுகளும் அல்ல. அதானி என்பவர், பிரதமர் நரேந்திர மோடியின் இன்னொரு முகமாகப் பார்க்கப்படுகிறார். அதனால் தான் அதானி விவகாரத்தை மிக ‘சீரியஸான’ விவகாரமாகப் பார்க்க வேண்டி இருக்கிறது.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ராகுல்காந்தி இது குறித்து தொடர்ச்சியாக வைத்து வரும் குற்றச்சாட்டுகள் மிகுந்த கவனத்துக்குரியன.

**“2014 ஆம் ஆண்டு 8 பில்லியன் டாலராக இருந்த அதானியின் சொத்து மதிப்பு இப்போது 140 பில்லியன் ஆனது எப்படி? 2014 ஆம் ஆண்டு உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 609 ஆவது இடத்தில் இருந்தவர், 2022 ஆம் ஆண்டு இரண்டாவது இடத்தை பிடித்தது எப்படி? விமான நிலையம் என்றாலும் அதானி தான். துறைமுகம் என்றாலும் அதானி தான். இந்தியா முழுக்க அனைத்து மாநிலங்களிலும் அதானி தான். அவர் எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் நஷ்டம் அடைவது இல்லையே எப்படி? இவர்கள் இருவருக்குமான உறவு குஜராத் முதலமைச்சராக மோடி இருக்கும் காலத்தில் இருந்து தொடர்கிறது.**

**முன் அனுபவம் இல்லாதவர்கள் விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள இயலாது என்ற விதியைத் திருத்தினார்கள். அதானிக்கு 6 விமான நிலையங்கள் தரப்பட்டன. இஸ்ரேலுக்கு பிரதமர் செல்கிறார். அவருக்குப் பின்னாலேயே நடந்து அதானி செல்கிறார். உடனே இஸ்ரேல் இந்தியா இடையிலான அனைத்து தொழில்துறை ஒப்பந்தங்களும் அதானிக்கு வந்து விடுகிறது. இதே போன்று ஆஸ்திரேலியாவுக்கு பிரதமர் செல்கிறார். உடனே மாயமந்திரமாக எஸ்.பி.ஐ. வங்கி அதானிக்கு 1 பில்லியன் டாலர் கடன் வழங்குகிறது. வங்கதேசத்திற்கு மோடி முதல் முறையாக செல்கிறார். அங்கு மின்விநியோகத்திற்கான திட்டம் முடிவாகிறது. சில நாட்களுக்கு பின் வங்கதேசத்தின் மின்வாரியம் 25 ஆண்டுகளுக்கு மின் விநியோக உரிமையை அதானிக்கு வழங்குகிறது. 1500 மெகாவாட் மின்சார ஒப்பந்தம் அதானிக்கு கிடைக்கிறது. அங்கிருந்து இலங்கை செல்கிறார்.**

**ஜீன் 2022ல் இலங்கை காற்றாலை மின்உற்பத்தி உரிமத்தை அதானிக்கு வழங்க வேண்டும் என மோடி அழுத்தம் கொடுப்பதாக ராஜபட்சே சொன்னார். இதுதான் உங்கள் வெளியுறவுக் கொள்கை. இது இந்திய வெளியுறவுக் கொள்கை அல்ல. அதானியின் வெளியுறவுக்கொள்கை” - என்று குற்றச்சாட்டுகளை பகிரங்கமாக வைத்து வருகிறார் ராகுல்காந்தி. அதற்கும் இதுவரை அதிகாரப்பூர்வ பதில் இல்லை.**

அதானி பதில் சொல்ல வேண்டிய குற்றச்சாட்டுகள் அல்ல இவை, பிரதமர் பதிலளிக்க வேண்டியவை இவை. இது வரை பதில் அளிக்கவில்லை. நாடாளுமன்றமே முடங்கிக் கிடந்தது. அதைப் பற்றி பா.ஜ.க. கவலைப்படவில்லை. நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஒன்றிய அரசே முன்வந்து சிறப்பு குழு விசாரணையை அமைத்திருக்க வேண்டும். பா.ஜ.க.விடம் இதனை நாம் எதிர்பார்க்க முடியாது. இப்போதும் காலம் கடந்துவிட வில்லை, சிறப்பு குழு விசாரணையை அமைத்து தன்னை பா.ஜ.க. நிரூபித்தாக வேண்டும்.

அதானி விவகாரத்தை ‘செபி’ விசாரிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. ‘செபி’ நேர்மையாக விசாரிக்க வேண்டும். நேர்மையாக விசாரிக்குமா என்று சொல்ல முடியாது. ஆனால், உச்சநீதிமன்றம் ‘செபி’யை நம்புகிறது. இவ்வளவு நம்பிக்கை வைக்கும் உச்சநீதிமன்றமானது, ‘செபி’யைக் கண்காணிக்க வேண்டும். இந்த விசாரணையானது உச்சநீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் நடைபெற வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”யை தொடங்கி வைத்து, 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டிஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு” 2024 தொடக்க விழாவில், செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள பெகட்ரான் நிறுவனத்தின் மின்னணு உற்பத்தி தொழிற்சாலை விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெகட்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சார்லஸ் லின், ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமைச் செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தும் முதல்வரைப் பாராட்டுகிறேன்!

# தொழில் முன்னேற்றத்திற்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு அளப்பரியது!

## உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் - ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயல் புகழாரம்!

**சென்னை, ஜன. 9-**

**மாநிலங்களின் வளர்ச்சியே இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கியமானது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டுகிறேன் என தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயல் புகழாரம் சூட்டினார்.**

சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஒன்றிய வர்த்தகம் & தொழில்துறை அமைச்சர் பியுஷ் கோயல் பேசியதாவது:-

வரலாறு, கலாசாரம், இயற்கையில் சிறந்த தமிழகத்தில் முதலீடு செய்ய வந்துள்ள அனைவரையும் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன். காஞ்சி பட்டுப்போல பல வண்ணங்களில் குவிந்திருக்கும் அனைவரையும் காண்பதில் மகிழ்ச்சி. முதலீடு செய்ய வந்துள்ளவர்களை பார்க்கும் போது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை தமிழகம் எட்ட வாழ்த்துக்கள். ஆதித்யா எல்1 திட்ட இயக்குனர் தமிழகத்தைச் சேர்ந்தவர் தான். அவரை பாராட்டுவோம். இஸ்ரோ விஞ்ஞானிகளை முன்னின்று நடத்தியவர் பிரதமர் மோடி. பிரதமர் மோடியின் இதயத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு தனி இடம் உள்ளது.



இந்தியாவின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் செங்கோல், தமிழகத்தை சேர்ந்தது.

100வது சுதந்திர தின விழாவின் போது, இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக இருக்கும். இந்தியா வலிமை அடைய நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சீரான வளர்ச்சி அடைய வேண்டும். தமிழகத்தின் 1 ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும். 1 ட்ரில்லியன் பொருளாதார இலக்குக்காக முதல்வர் ஸ்டாலினை பாராட்டுகிறேன். கடந்த 10 ஆண்டுகளில் தொழில் வளர்ச்சியில் தமிழகத்துடன் இணைந்து மத்திய அரசு பணியாற்றுகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின், சகோதரர் டி.ஆர்.பி.ராஜா இருவரையும் கண்டிப்பாக பாராட்டியே ஆக வேண்டும். தமிழ்நாட்டை மாற்றியமைப்பதில் தைரியமான முடிவுகளை எடுக்கின்றனர். இந்தியாவின் பண்பாட்டிற்கு தமிழக கலாசாரம் அளித்து வரும் பங்கு மிகப்பெரியது. இந்தியாவின் கலாசார தொடர்புகளை பிரதிபலிக்கவே காசி சங்கமம் போன்ற நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

நாட்டில் உள்ள பணி செய்யும் பெண்களில் 43% பேர் தமிழ்நாட்டில் பணியாற்றுகின்றனர். மேலும் இந்த எண்ணிக்கை அதிகரித்து, நாட்டின் பொருளாதார உயர்வில் பெண்கள் பங்களிப்பு உயர வேண்டும் என விரும்புகிறேன்.

பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் 10 ஆண்டுகளாக நாடு வளர்ச்சி அடைந்து வருகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பு நலிவடைந்த பொருளாதாரத்தில் இருந்தது இந்தியா. தற்போது இந்தியா வளர்ச்சியடைந்த முதல் 5 நாடுகளின் பட்டியலில் உள்ளது. உலகிலேயே மக்கள் தொகையில் இளைஞர்களை அதிகம் கொண்ட நாடு இந்தியா. 2047 என்ற இலக்கை நோக்கி நாட்டை வேகமாக முன்னெடுத்து செல்கிறோம். தரமான கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்குவதில் கவனம் செலுத்துகிறோம். 2047க்குள் ஒவ்வொன்றிலும் காலனி அடிமைத்தனத்தில் இருந்து மீளுவோம்.

இந்தியாவின் 100வது சுதந்திர தினத்திற்குள் ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைவோம். 35 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்துடன் இந்தியாவை வளர்ந்த நாடாக்குவது ஒவ்வொருடைய கனவாக இருக்க வேண்டும். ஊழலில்லாத இந்தியா, பெண்களின் சக்தியை வலிமைப்படுத்தும் வகையில் செயல்படுவோம். பெண்களுக்கு பார்லிமென்டில், இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா மிக மகிழ்ச்சியான செய்தி.

2047க்குள் 35 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை இந்தியா அடையும். இதனை தமிழகமும் கவனத்தில் கொள்ள வேண்டும். உலகிலேயே தொழில் வளர்ச்சிக்கு மிக சிறந்த இடங்களில் ஒன்று தமிழகம். 2014 முதல் பிரதமர் மோடி எடுத்த தொடர் நடவடிக்கையால் தொழில் துறை வலுவாக உள்ளது. மத்திய அரசின் முயற்சிகளுக்கு ஆதரவாக செயல்படும் தமிழக அரசுக்கு நன்றி. முதலீட்டாளர்களுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து தருவோம் என உறுதியளிக்கிறோம்.

இவ்வாறு பியூஷ் கோயல் பேசினார்.

### உலக முதலீட்டாளர்கள் மாநாடு – தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும்!

# நாட்டின் பல துறைகளில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது!

## டி.வி.எஸ். குழுமத் தலைவர் வேணு சீனிவாசன் பெருமிதம்!

**சென்னை, ஜன. 9 -**

**நாட்டின் பல துறைகளில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது பெருமையாக இருப்பதாக டி.வி.எஸ். குழுமத் தலைவர் வேணு சீனிவாசன் தெரிவித்துள்ளார்.**

சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்று வரும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், அமைதியான சூழல், சிறப்பான சட்டம் ஒழுங்கு, திறமையான பணியாளர்கள் இருப்பதால் சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி அதிகளவில் வருவதாகக் கூறினார்.

தொழில்வளர்ச்சி, பெண்களின் வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதாகவும் குறிப்பிட்டார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம், வேலை வாய்ப்புகளை மிகப்பெரிய அளவில் அதிகரிக்க உதவும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:-

சிறந்த அரசியல் தலைமை, சிறந்த நிர்வாகம், அமைதியான சட்டம் ஒழுங்கை தமிழ்நாடு கொண்டுள்ளது.

நாட்டிலேயே திறன்மிக்க தொழிலாளர்கள், பொறியாளர்கள் தமிழ்நாட்டில்தான் அதிகமாக உள்ளனர் அதனால்தான், சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி அதிகளவில் வருகின்றன.

கடந்த 2 ஆண்டுகளில் தமிழ்நாடு முதலீடுகளை ஈர்த்துள்ளது. 221 புரிந்துணர்வு



ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

ரூ.2.7 லட்சம் கோடி முதலீடுகளில் 4 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியா மட்டுமின்றி, பல்வேறு நாடுகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு வந்து தொழில் தொடங்க சிறந்த தளமாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு அமைகிறது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் தலைமைக்கும், அவரது தொலைநோக்குப் பார்வைக்கும் நன்றி.

இவ்வாறு வேணு சீனிவாசன் குறிப்பிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024" தொடக்க விழாவில், டி.வி.எஸ். குழுமம் தமிழ்நாட்டில் வாகன உற்பத்தி, தகவல் தொழில்நுட்ப துறையில் கூடுதல் முதலீடுகள் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024" தொடக்க விழாவில், தூத்துக்குடி மாவட்டத்தில் மின்சார வாகன கார் மற்றும் மின்கலன் உற்பத்தித் தொழிற்சாலையை அமைப்பதற்காக VinFast நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, VinFast நிறுவனத்தின் துணை முதன்மை செயல் அலுவலர் Mr. Nguyen Dang Quang, ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் திரு ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமிரிட்டஸ் திரு வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 'திராவிட நாயகன்' முதல்வர் மு.க.ஸ்டாலினின் நிர்வாகத் திறனால்

# தமிழ்நாட்டின் பொருளாதாரம் பன்மடங்கு உயர்ந்து நிற்கிறது!

## உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் - தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை!

சென்னை, ஜன.9-

**உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் தொழில்துறை அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி.ராஜா தனது வரவேற்புரையில், "திராவிட நாயகன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நிர்வாகத் திறனால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் பன்மடங்கு உயர்ந்து நிற்கிறது" என்று குறிப்பிட்டார்.**

**இம் மாநாட்டில் அவர் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:**

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த உலக முதலீட்டாளர் மாநாட்டில், தமிழ்நாட்டின் மிகவும் திறமையான பணியாளர்கள், வலுமிகுந்த உள்கட்டமைப்பு மற்றும் மேம்பட்ட தொழில் திறன் ஆகியவற்றின் சிறப்புகளைக் கொண்டாடும் இந்நிகழ்வில் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சிறப்புகள் அத்தனையும் திராவிட மாடல் ஆட்சியின் விளைவாகவும் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உட்பட புகழ்பெற்ற தலைவர்கள் பலராலும் பல தலைமுறைகளாகக் கட்டமைக்கப்பட்டது.

ஒரு மாநிலமாக தமிழ்நாடு எட்டிப்பிடித்த முக்கியமான சாதனைகளை இந்த நேரத்தில் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

● இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமான தமிழ்நாடு பல்வேறு துறைகளில் முதலிடத்தில் உள்ளது.

● இந்தியாவில் சிறந்த தொழில் மைய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மேலும், 45,000க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுடன் தமிழ்நாடு; உற்பத்தித் திறனாற்றல் மையமாகவும் விளங்குகிறது.

● ஆட்டோமொபைல் மற்றும் வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பில் நாம் இந்தியாவில் முதலிடத்தில் (நம்பர் ஒன் ஆக) இருப்பதனால், இந்தியாவின் வாகன உற்பத்தி தலைநகராகத் தமிழ்நாடு உள்ளது. மேலும், வாகன டயர் தயாரிப்பிலும் நாம் முதலிடத்தில் இருக்கிறோம்.

● இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மின்னணு (எலக்ரானிக்ஸ்) பொருட்கள் உற்பத்தியில் 30 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வழங்குவதனால், தமிழ்நாடு மின்னணு துறையில் உயர்ந்து விளங்குகிறது.



● நாட்டின் முன்னணி மின்னணுப் பொருட்கள் (எலக்ட்ரானிக்ஸ்) உற்பத்தியாளரான நாம், கடந்த ஆண்டு 5.37 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை அடைந்தோம். இந்த ஆண்டு ஏற்கனவே 5.6 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஏற்றுமதியைக் கடந்து விட்டோம்.

**இந்தியாவின் முதன்மையான மின்வாகன உற்பத்தியாளர், தமிழ்நாடு!**

● இந்தியாவில் விற்பனையாகும் இருசக்கர மின்வாகனங்களில் (EV) 70 சதவீதமும், நான்கு சக்கர மின்வாகனங்களில் 40சதவீதமும் தமிழ்நாடு உற்பத்தி செய்து தருவதால், இந்தியாவின் முதன்மையான மின்வாகன (EV) உற்பத்தியாளராக தலைநிமிர்ந்து நிற்கிறோம்.

● தோல் பொருட்கள் உற்பத்தியில் நாட்டின் முதன்மையான மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதுடன், தோல் அல்லாத பிற காலணிகள் துறையிலும் உலகத் தரத்திற்கு இணையாக நாம் வளர்ந்து வருகிறோம். ஏற்றுமதித் தயார்நிலைக் குறியீட்டிலும் முதலிடத்தை வகிக்கிறோம்.

**சென்னைக்கு – 'உலகத்திறன் மையம்' எனும் அந்தஸ்து!**

● அதிகளவில் ஆராய்ச்சியாளர்களையும், குறிப்பாக ஆராய்ச்சித்துறையில் பெண்களையும் அதிகமாக உருவாக்குவதன் அடிப்படையில்; ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் (R&D) துறையில் நாம் முதன்மையான மாநிலமாக விளங்குகிறோம்.

● இந்தியாவிலேயே காப்புரிமைகளில் தமிழ்நாடு முதன்மையாகத் திகழ்கிறது. இது, நம்மிடம் உயர் திறன் கொண்ட திறமை மிகுந்தவர்கள் நிறைந்துள்ளனர் என்பதற்குச் சான்றாகும்.

● "இந்தியாவில் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு" என்ற பெருமையுடன், நம் மாநிலத்தில்தான் இந்தியாவில் பெண்களுக்கு அதிக பாதுகாப்பு கொண்ட நகரங்கள் அதிகளவில் உள்ளன என்பதும் பெருமிதமாகும்.

● பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களை நிறுவுவதற்கு ஏற்ற வகையில் சென்னை, இந்தியாவிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் நகரமாக இருப்பதால், இது உலகத் திறன் மையம் GCC என்ற அந்தஸ்தைப் பெறுகிறது.

● நம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு எப்போதும் முதுகெலும்பாக இருப்பவர்கள், நம் அதிதிறன் வாய்ந்த பணியாளர்களே. இந்தியத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 43 சதவீதத்திற்கும் அதிகமானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், பெண் பணியாளர்கள் பங்கேற்பில், நாட்டில் யாரும் தொட முடியாத உயரத்தில் நாம் இருக்கிறோம்.

● நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால், 'நான் முதல்வன்' போன்ற திட்டங்கள் திறமையாக நிர்வகிக்கப்படு வதால், தொழில்துறையின் நேரடி உள்ளீடுகளுடன் எங்கள் பணியாளர்கள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றனர்.

**ஸ்காண்டிநேவிய நாடுகளுடன் ஒப்பிடும் அளவு – தமிழ்நாடு மருத்துவத்துறை!**

● சமூக உள்கட்டமைப்பில், குறிப்பாக சுகாதாரம் மற்றும் கல்வியில் நாட்டை முன்னெடுத்துச் செல்வதில் நாம் என்றும் பெருமிதம் கொள்கிறோம்.

● தமிழ்நாட்டில் 250 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார், இது ஐரோப்பியக் கண்டத்தின் ஸ்காண்டிநேவிய நாடுகளுடன் ஒப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.

**மாநாட்டின் நோக்கம்!**

● தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும் 1 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொறியாளர்களை உருவாக்குகிறது.

● உயர்கல்வி நிறுவனங்களுக்கான தேசிய தர நிர்ணய கட்டமைப்பு வெளியிடும் தரவரிசையிலும் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது தமிழ்நாடு. அந்தத் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் முதல் 100 கல்லூரிகளில் 22 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டின் பெருமைகளை இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இதற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது, அனைத்தையும் உள்ளடக்கிய சமூக பொருளாதாரக் கொள்கைகளேயாகும்.

தற்போது சீரும் சிறப்புமாக நடைபெற்று வரும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம், தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியுடன், பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதுடன், நீடித்த நிலைத்த ன்மையும் மையமாகக் கொண்டு செயல்படுகிறது என்பதை வெளிக் கொணர்வதே எங்கள் நோக்கமாகும்.

**தமிழ்நாட்டுப் பெண்களுக்கு – மிகப்பெரிய புத்தொளிமிக்க எதிர்காலம்!**

இந்த சமூக நீதி மண்ணில், தமிழ்நாடு முழுமைக்கும் பரந்துபட்ட வளர்ச்சியை ஏற்படுத்துவதில் முதலமைச்சர் அவர்கள் உறுதி கொண்டுள்ளார். அதனை நிறைவேற்றும் விதமாக, இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு, தமிழ்நாட்டின் திறமையான இளைஞர்களுக்கு குறிப்பாக தமிழ்நாட்டுப் பெண்களுக்கு மிகப் பெரிய, புத்தொளிமிக்க எதிர்காலத்தை வழங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்.

**திராவிட நாயகன் – தமிழ்நாட்டு முதல்வருக்கு நன்றி!**

இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த முதலமைச்சர் நமது திராவிட நாயகன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024'க்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வரவேற்புரை ஆற்றினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தொழில் தொடங்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

# ஜியோ நிறுவனம் ரூ.35 ஆயிரம் கோடி முதலீடு!

## முகேஷ் அம்பானி பெருமித உரை!

*சென்னை, ஜன.9-*

*உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஜியோ நிறுவன தலைவர் முகேஷ் அம்பானி நேரடியாக கலந்து கொள்ளவில்லை. ஆனால் காணொலி மூலம் அவர் உரையாற்றினார்.*

*அவ்வுரையில் அவர் கூறியதாவது:-*



*முதலீட்டாளர்கள் மாநாட்டில் நேரில் கலந்து கொள்ள முடியாதது வருத்தம் அளிக்கிறது. தமிழ்நாடு அறிவுசார், பாரம்பரியத்தில் சிறந்து விளங்கும் மாநிலம். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு தொழில் தொடங்க உகந்த மாநிலமாக உள்ளது.*

*ஜியோ நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.35 ஆயிரம் கோடி முதலீடு செய்துள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி - பசுமை ஹைட்ரஜன் தொழில் தொடங்கப்பட உள்ளது. இந்த ஆலை அடுத்த வாரம் தொடங்கப்பட உள்ளது.*

*தமிழ்நாட்டில் ஜியோவின் 300 சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன. ஜியோ வாடிக்கையாளர்களாக 3.5 கோடி பேர் உள்ளார்கள். இதில் ரூ.25 ஆயிரம் கோடி முதலீடு செய்துள்ளோம்.*

*தமிழ்நாட்டில் ஜியோ நிறுவனம் 5ஜி சேவையை கடந்த மாதமே முழுமையாக வழங்கத் தொடங்கி விட்டது.*

*இவ்வாறு முகேஷ் அம்பானி பேசினார்.*

## ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரத்தை தமிழ்நாடு விரைவில் எட்டும்!

# தொழில் தொடங்க சிறந்த மாநிலம் தமிழ்நாடு!

## இந்திய தொழில் கூட்டமைப்பினர் - பெரும் தொழில் நிறுவனங்கள் பாராட்டு!

சென்னை, ஜன.9-

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய தொழில் கூட்டமைப்பினரும் - பல்வேறு இந்திய - வெளிநாடுகளின் தொழில் நிறுவனத்தினரும் "தொழில் தொடங்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!" என்று பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் குறிப்பிட்டதாவது:-

**இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் தினேஷ்**

ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரத்தை தமிழ்நாடு எட்டும். உள் நாட்டு உற்பத்தியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் மூலம் தமிழ்நாட்டில் 3 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. தொழில் தொடங்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வரும் முயற்சிக்கு இந்திய தொழில் கூட்டமைப்பு துணை நிற்கும்.

**'ஓலா' எலக்ட்ரிக் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பாவிஷ் அகர்வால்**

நவீன தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு மிகுந்த ஈடுபாடு செலுத்தி வருகிறது. மின் வாகன உற்பத்திக்கு தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்பு பாராட்டும்படி உள்ளது. தொழில் தொடங்க சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

தமிழ்நாட்டில் அடிக்கல் நாட்டி 8 மாதங்களில் இருசக்கர வாகன உற்பத்தியைத் தொடங்கியுள்ளோம். எங்களது ஓலா நிறுவனத்தில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பணிபுரிகின்றனர்.

இந்தியாவில் மிகப்பெரிய மின்சார வாகன உற்பத்தி தொழிற்சாலையை தமிழ்நாட்டில் நிறுவ உள்ளோம். ஆட்டோ மொபைல் துறையில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

**ஹூண்டாய் நிர்வாக - இயக்குநர் உன்சூ கிம்**

தமிழ்நாடு அரசிற்கும், ஹூண்டாய் நிறுவனத்திற்கும் இடையே ரூ.30 ஆயிரம் கோடி ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. ஹூண்டாய் நிறுவனத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே நீண்ட கால தொழில்நுட்ப உறவு உள்ளது.

2030-க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு லட்சம் கோடி டாலரை எட்ட ஹூண்டாய் நிறுவனம் உறுதுணையாக இருக்கும்.

**ஏ.பி. மோலர் மெர்ஸ்க் நிறுவனம் - ரெனேபில் பெடர்சன்**

எங்கள் நிறுவனத்திற்கும், இந்தியாவிற்கும் இடையே நீண்ட உறவு உள்ளது. தமிழ்நாட்டில் எங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறோம்

2030-க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு லட்சம் கோடி டாலரை எட்ட நாங்கள் உறுதுணையாக இருப்போம்.

**கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் நிசாபா கோத்ரெஜ்**

கோத்ரேஜ் நிறுவனத்தின் உலகலாவிய விநியோக மையம் தமிழ்நாட்டில் அமைய உள்ளது. இந்தியாவில் உள்ள பெண் தொழிலாளர்களில் 43% பேர் தமிழ்நாட்டில் உள்ளனர் .

**ஜே.எஸ்.டபிள்யூ. நிர்வாக இயக்குநர் சஜ்ஜன் ஜிண்டால்**

இந்தியாவிலேயே மிக அதிகம் தொழிற்சாலைகளை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்தியாவின் மொத்த மின்வாகன உற்பத்தியில் 70 சதவீதம் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

நாடுமுழுவதும் உள்ள காற்றாலை மின் உற்பத்தியில் 3-ல் ஒரு பங்கு தமிழ்நாட்டில் உள்ளது. நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் தொழில்நுட்பங்கள் முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் தொழில் நடத்துவதற்கான சூழ்நிலை பாராட்டுக்குரியதாக உள்ளது. தமிழ்நாட்டில் எங்கள் நிறுவனம் உற்பத்தி செய்யும் உருக்கு, உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. காற்றாலை மின் உற்பத்தியில் எங்களது நிறுவனம் கூடுதல் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை தமிழ்நாடு அரசால் விரைவில் எட்ட முடியும்.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டனர்.




சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பரந்தூர் விமான நிலையத்தின் மாதிரி காட்சிப்படுத்தப்பட்டது.

## உலக முதலீட்டாளர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் காண இந்தியாவில் முதல் முறையாக

# தமிழ்நாட்டு மாணவ - மாணவியர்களுக்கு சிறப்பு ஏற்பாடு!

## 40 இலட்சம் மாணவர்கள் அலைபேசி வழியாகவும் 1.60 இலட்சம் மாணவர்கள் எல்.இ.டி. திரை மூலம் கண்டு பயன்!

*சென்னை, ஜன.9-*

*சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 நிகழ்ச்சிகளை 40 இலட்சம் மாணவ - மாணவியர்கள் கைப்பேசி (Mobile Phone) இணையவழி இணைப்பின் மூலம் கண்டனர். 38 மாவட்டங்களில் 1,60 இலட்சம் மாணவ - மாணவியர்கள் தங்களது கல்லூரியிலிருந்து எல்.இ.டி. திரை மூலமாக நேரடி ஒளி பரப்பில் தமிழ்நாடு உலக முதலீட்டாளர் மாநாட்டினை பார்வையிட்டனர்.*

*தமிழ்நாடு முதலமச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சென்னை வர்த்தக மையத்தில் இரண்டு நாள் உலக முதலீட்டாளர் மாநாடு 2024ஐ தொடங்கி வைத்தார்.*

*இம்மாநாட்டில் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை, நுகர்வோர் விவரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் பியூஸ் கோயல், அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.*

*இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்தும் நிறுவனங்கள் பங்கேற்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த சிறப்பான நிகழ்ச்சியை காண்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களில் 40 இலட்சம் மாணவ - மாணவியர்கள் மாவட்டங்களில் அலைபேசி மூலம் இணையவழியாக பார்வையிட சிறப்பு வசதி செய்யப்பட்டது.*

*மேலும் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களில் உள்ள முக்கிய கல்லூரிகள், பள்ளிகள், மாவட்டத் தொழில் மையங்கள், டிட்கோ வளாகம் என பல் வேறு தொழில்துறை சார்ந்த நிறுவனங்கள் மூலம் சுமார் 1.60 இலட்சம் எண்ணிக்கையிலான கல்லூரி மற்றும் பள்ளி மாணவ - மாணவிகள் இம்மாநாட்டின் சிறப்பு நிகழ்வுகளையும். தொழில் வாய்ப்புகளையும், தொழில் நுட்பங்களையும் அறிந்திட வசதி செய்து தரப்பட்டுள்ளது.*

*இம்மாநாடு தொடர்பான வாட்ஸ் அப் சிறப்புச் செய்திகள் 45 இலட்ச நபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டு நிகழ்வுகளை காண இந்தியாவில் முதல் முறையாக தமிழ்நாட்டில் மாணவ - மாணவியர்களுக்கு இந்த அரிய வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.*

# முதலீடுகளை ஈர்ப்பதில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி...

மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார நிறுவனங்களும் எங்களுடன் இணைந்து செயல்பட்டுள்ளார்கள். உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதார வளர்ச்சியில் அதிவிரைவுப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டிற்கு, கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பது மூலமாக, மேலும், தொழில் வளர்ச்சிக்கு இந்த மாநாடு வழிவகுத்துக் கொடுக்கும்! முன்னணி முதலீட்டாளர்கள், வணிக அமைப்புகள், நிதி நிறுவனங்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டிருக்கின்ற எல்லாருக்கும் இந்த மாநாடு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

### அதிக முதலீடுகளை ஈர்த்து சாதனை படைத்துள்ளது தமிழ்நாடு!

இந்த மாநாட்டில், நாங்கள் பல்வேறு சிறப்பம்சங்களை உங்களுக்கு அளிக்க இருக்கிறோம். தலைமைத்துவம் - Leadership, நீடித்த நிலைத்தன்மை - Sustainability, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - Inclusivity என்ற கருப்பொருள்களில் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளாகவே, 'முதலீட்டாளர்களின் முதல் முகவரி மாநாடு தமிழ்நாடுதான்' என்று தமிழ்நாடு அங்கீகாரம் பெற்றிருக்கிறது. இந்த நிலையை மேம்படுத்துகின்ற வகையிலேயும், மாநிலத்தின் முதலீடு ஈர்ப்புத் திறனை உலகுக்கு வெளிப்படுத்தவும், இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துகிறோம்.

நாங்கள் துறை வாரியாக மேற்கொண்ட முதலீட்டாளர்கள் மாநாட்டு சந்திப்பிற்கு நல்ல வரவேற்பு கிடைக்கிறது. அதில் பெருமளவு முதலீடுகளை ஈர்த்து சாதனைகளையும் படைத்திருக்கிறோம். உங்களையெல்லாம் காணும்போது, இந்த சாதனைகளையெல்லாம் விஞ்சக்கூடியதாக இந்த மாநாடு அமையப் போகிறது என்ற நம்பிக்கை பிறக்கிறது. தொழில்மயமாக்கல் வரலாற்றில், ஒரு மகத்தான அத்தியாயமாகவும் இந்த மாநாடு இருக்கப் போகின்றது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றவேண்டும் என்ற குறிக்கோளோடுதான், 2030-ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை, 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று ஒரு இலட்சிய இலக்கை நான் நிர்ணயித்திருக்கிறேன். உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்ப்பது, மற்றும் வேலைவாய்ப்பு மிகுந்த முதலீடுகளை ஈர்ப்பது என்ற இருமுனை அணுகுமுறையை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

ஒரு மாநிலத்தில், தொழில் முதலீடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றால், அந்த மாநிலத்தின் ஆட்சி மேல் நல்லெண்ணம் இருக்கவேண்டும்! அங்கு சட்டம் - ஒழுங்கு நல்ல முறையில் பேணப்பட்டு, அமைதியான சூழல் நிலவவேண்டும்! ஆட்சியாளர்கள் மேல் உயர்மதிப்பு இருக்கவேண்டும்! அந்த மாநிலத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக இருக்கவேண்டும்! 2021-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல், இந்த அம்சங்களெல்லாம் தமிழ்நாட்டில் இருப்பதால்தான், தொழில் துறையில் ஏராளமான முதலீடுகள் குவிகிறது! முதலீட்டாளர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று முன்கூட்டியே கணித்து, இன்றைய தமிழ்நாடு அரசு செயல்படுகிறது.

### திறமையான இளைய சக்தியை உருவாக்கும் தமிழ்நாடு அரசு!

வணிகம் புரிதலை எளிதாக்கி வருகிறோம். திறன்மிகு பணியாளர்களை உருவாக்கி வருகிறோம். நாளைய தொழில் மாற்றங்களைக் கணித்து வைத்திருக்கிறோம். தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடையே இணைப்பினை ஏற்படுத்தி வருகிறோம். தொழிற்சாலைகளுக்கேற்ற தொழிலாளர்களை தயார்படுத்தி வருகிறோம். 'நான் முதல்வன்' திட்டம் மூலம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளித்து வருகிறோம். இளைஞர்களின் திறனுக்கேற்ற வேலைகளை உறுதி செய்து தருகிறோம். திறமையான இளைய சக்தியை உருவாக்கித் தருவதை நோக்கமாகக் கொண்டது, இன்றைய தமிழ்நாடு அரசு.

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பெண்களை முன்னிலைப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தமிழ்நாட்டில் இருந்துதான் உருவானார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரின் அடியொற்றி, பெண்களுக்குச் சமூக, கல்வி, பொருளாதார, அரசியல்ரீதியாக அதிகாரமளிக்கின்ற திட்டங்கள், இந்தியாவுக்கே முன்னோடியாக செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

### பெண்கள் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் தருகிறோம்!

பெண்களுக்கு பொருளாதார விடுதலை என்பது இந்த திராவிட மாடல் அரசின் முழக்கம்! அதனால்தான், "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" "புதுமைப் பெண் திட்டம்" "விடியல் பயணம்" "தோழி விடுதி" என்று அறிவித்து, பெண்கள் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம்!

கடந்த இரண்டரை ஆண்டு ஆட்சிக்காலத்தில், பெருமளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகள் உருவாக்குகின்ற வகையில், 200-க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை,**

**தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை,**

**மூலதனம் நிறைந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் PV செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளையும், ஜவுளி மற்றும் ஆடைகள், காலணிகள் மற்றும் தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. உலகம் முழுவதிலும் இருந்து 150-க்கும் மேற்பட்ட முன்னணி வல்லுநர்களும், தலைமையாளர்களும் பங்கேற்கின்ற கருத்தரங்குகள், புத்தாக்கம் தொடர்பான நிகழ்ச்சிகள், இளம் தலைவர்கள் வணிகத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள், மகளிர் தலைமையாளர்களின் குழு விவாதங்கள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.**

**எட்டு துறைகள் சார்ந்த பெரிய தொழிற்சாலைகள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்களுக்கான அரங்குகள் மற்றும் தமிழ்நாடு சூழலமைப்பு அரங்கம் என்று பல்வேறு விதமான அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கிறது. பன்னாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டு, பங்குதாரர் நாடுகள் தமிழ்நாட்டின் உடனான தங்களுடைய ஆழமான மற்றும் நீண்டகால ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.**

**தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை,**

**தமிழ்நாடு தரவு மையக் கொள்கை,**

**தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை,**

**தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை,**

**தமிழ்நாடு விண்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை,**

**தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை, செயற்கை மணல் (M-Sand) உற்பத்தியை ஒழுங்குப்படுத்துவதற்கான புதிய கொள்கை,**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 தொடக்க விழாவில், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ் அவர்கள் சந்தித்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 5 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உள்ளனர்.

**தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை,**

**தமிழ்நாடு எத்தனால் கொள்கை,**

**தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை,**

**தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்து திட்டம்,**

**தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து செயற்கை இழை நூல், மற்றும் செயற்கை இழை துணி மற்றும் ஆடை தயாரிப்புகளுக்கான சிறப்பு திட்டம்,**

**தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை திட்டம் மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை,**

## பெண்களுக்கு பொருளாதார விடுதலை என்பது 'திராவிட மாடல்' அரசின் முழக்கமாகும்!

**தமிழ்நாடு சுற்றுலா கொள்கை,**

**தென்னை நார் கொள்கை**

எனப் பல்வேறு கொள்கைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

### தமிழ்நாடு முழுவதும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்துவதே எங்கள் இலட்சியம்!

தமிழ்நாடு முழுவதும் பரவலான மற்றும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் எங்களுடைய இலட்சியம்! அதனால்தான் தொழில் திட்டங்கள் எல்லாம் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு வருகிறது! பல பின்தங்கிய மாவட்டங்களில், பெரும் அளவில், வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற விதமாக முதலீட்டுத் திட்டங்கள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம், அந்த மாவட்டங்களில் இருக்கின்ற இளைஞர்களுக்கும், மகளிர்களுக்கும் அவரவர்கள் வசிக்கின்ற மாவட்டங்களிலேயே வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுவது மட்டுமில்லாமல், அந்த மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியும் பெருமளவில் அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே தங்களுடைய தொழில்திட்டங்களை அமைத்திருக்கிற பல நிறுவனங்கள், தங்களுடைய திட்டங்களை நன்றாக விரிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பது, தமிழ்நாட்டின் சிறப்பான தொழில் சூழலுக்கான அத்தாட்சி! மிகப்பெரும் தொழில் நிறுவனங்களான, ஹூண்டாய், டாடா போன்ற நிறுவனங்கள், தங்கள் முதலீடுகளை பன்மடங்கு அதிகரித்துள்ளன. 130-க்கும் மேற்பட்ட "Fortune 500" நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்களுடைய திட்டங்களை நிறுவியிருப்பது, தமிழ்நாட்டில் முதலீட்டுக்கான சிறந்த சூழல் அமைந்திருப்பதற்கு இது ஒரு சான்று! முதலீடுகளை ஈர்க்கின்ற மாநிலங்களில், இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணி நிலை வகிக்கிறது! உலக அளவிலான முதலீட்டாளர்களை நன்கு வரவேற்கும் மாநிலமாக அதாவது 'Most Welcoming State -ஆக தமிழ்நாடு இருக்கிறது.

### அனைத்துத் துறைகளிலும் திறன்மிகு பணியாளர்களைக் கொண்ட மாநிலம்!

தமிழ்நாட்டைச் சேர்ந்த பணியாளர்கள் மிகவும் திறமையானவர்கள். முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து சேவை ஆதரவுகளையும் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது. அனைத்து துறைகளிலும் திறன்மிகு பணியாளர்களை இந்த மாநிலம் கொண்டுள்ளது. இந்த மாநாடு நடைபெறுகிற இரண்டு நாட்களிலும் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

மூலதனம் நிறைந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் PV செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளையும், ஜவுளி மற்றும் ஆடைகள், காலணிகள் மற்றும் தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. உலகம் முழுவதிலும் இருந்து 150-க்கும் மேற்பட்ட முன்னணி வல்லுநர்களும், தலைமையாளர்களும் பங்கேற்கின்ற கருத்தரங்குகள், புத்தாக்கம் தொடர்பான நிகழ்ச்சிகள், இளம் தலைவர்கள் வணிகத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள், மகளிர் தலைமையாளர்களின் குழு விவாதங்கள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

எட்டு துறைகள் சார்ந்த பெரிய தொழிற்சாலைகள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்களுக்கான அரங்குகள் மற்றும் தமிழ்நாடு சூழலமைப்பு அரங்கம் என்று பல்வேறு விதமான அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கிறது. பன்னாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டு, பங்குதாரர் நாடுகள் தமிழ்நாட்டின் உடனான தங்களுடைய ஆழமான மற்றும் நீண்டகால ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

### புத்தொழில்களுக்கென்று தனி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது!

கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, 3000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்பட, எதிர்கால சந்ததியினரை இம்மாநாட்டிற்கு ஈர்த்துள்ளோம். புத்தொழில்களுக்கென்று ஒரு தனி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வளர்ந்து வரும் முதலீட்டாளர்கள், இந்தத் துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடுவார்கள்! குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சார்பில் 'வாங்குவோர் - விற்பனையாளர் சந்திப்பு' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இது மூலமாக 20-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், 500-க்கும் மேற்பட்ட உள்நாட்டு விற்பனையாளர்களுடன் கலந்துரையாடுவார்கள்! உலகம் முழுவதும் இருக்கின்ற முதலீட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களது முதலீடுகளை நாங்கள் கோரியுள்ளோம்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக, முதலீட்டாளர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைப்பு விடுத்து வருகிறோம். அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாட்டை நாங்கள் முதன்மை பெறச் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகவும் திகழ வேண்டும் என்பதே எங்களது இலட்சியம்!

**கடந்த இரண்டரை ஆண்டுகளாக, முதலீட்டாளர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைப்பு விடுத்து வருகிறோம். அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாட்டை நாங்கள் முதன்மை பெறச் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகவும் திகழ வேண்டும் என்பதே எங்களது இலட்சியம்! இந்த முயற்சிகளுக்கு மகுடம் சூட்டிடும் வகையிலும், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாட்டின் வலிமையை உலகிற்குத் தெரிய வைத்திடும்!**

இந்த முயற்சிகளுக்கு மகுடம் சூட்டிடும் வகையிலும், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாட்டின் வலிமையை உலகிற்குத் தெரிய வைத்திடும்!

### தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாருங்கள் என மனதார அழைக்கிறேன்!

இங்கு கூடியிருக்கும் முதலீட்டாளர்களாகிய உங்கள் மத்தியில் உரையாற்றுவது உள்ளபடியே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. தொழில்துறையில் பெரும் சாதனை படைத்த அனுபவசாலிகள் இந்த அரங்கில் நிறைந்துள்ளீர்கள். இங்கு பல ஆண்டுகளாக தொழில் புரியும் அனுபவமும் உங்களுக்கெல்லாம் உள்ளது. சுருங்கச் சொன்னால், உங்களையும், உங்கள் வணிகத்திட்டங்களையும், உலகளாவிய முதலீட்டாளர்களோடு இணைத்துக் கொள்ளும் பொன்னான வாய்ப்பினை நாங்கள் இந்த மாநாடு மூலமாக ஏற்படுத்தித் தந்துள்ளோம்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யுங்கள்! அனைவரும் சேர்ந்து எதிர்காலத்தை பகிர்ந்து கொள்வோம் வாருங்கள்! ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கனவை நனவாக்குவோம் வாருங்கள் என மனதார அழைப்பு விடுக்கிறேன்.

### தமிழ்நாட்டின் முன்னேற்றம் இந்தியாவின் வளர்ச்சி!

இந்த மாநாட்டினால் தமிழ்நாட்டின் பொருளாதரம் வளரும்! அதன்மூலம் இந்தியப் பொருளாதாரமும் உயரும்! அன்புக்குரிய முதலீட்டாளர்களே, உலகத்தின் பல நாடுகளிலிருந்து, அமைதியில் சிறந்த, முதலீட்டாளர்களின் நண்பனாக திகழுகிற தமிழ்நாட்டில் முதலீடு செய்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வந்து இருக்கிறீர்கள். என் தலைமையிலான தமிழ்நாடு அரசு, உங்களுக்கு அனைத்து வகையிலும், உறுதுணையாக இருக்கும்! உங்களுடைய உணர்வுகளை மதிக்கும்! தொழில் தொடங்க அனைத்து உதவிகளையும் செய்யும்! ஏனென்றால், இது, "சொன்னதை செய்வோம்! செய்வதை சொல்வோம்!" என்ற ஆட்சி நடத்துகின்ற திராவிட மாடல் அரசு!

வாருங்கள்... முதலீடு செய்யுங்கள்... தமிழ்நாட்டின் முன்னேற்றத்திலும், இந்தியாவின் வளர்ச்சியிலும் உங்கள் பங்களிப்பை தாராளமாக வழங்குங்கள் என்று அன்புடன் அழைக்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**10. குவால்காம் நிறுவனம்** ரூ.177.27 கோடி முதலீடு செய்துள்ளது.

### 40,500 பேருக்கு வேலை வாய்ப்பு!

சென்னையில் நேற்று நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல்வேறு முன்னணி நிறுவனங்கள் முதலீடு செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்து இட்டுள்ளன. முகேஷ் அம்பானியின் ஜியோ நிறுவனம், ஹூண்டாய் நிறுவனம் என பல்வேறு நிறுவனங்கள் பல ஆயிரம் கோடி ரூபாயை தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ளன.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இரும்பு தயாரிப்பு தொழிற்சாலை அமைய இருப்பதன் மூலம் 6 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் மின்சார கார் பேட்டரி தயாரிப்பு நிறுவனம் தொடங்கப் படுவதன் மூலம் அங்கும் ஆயிரக்கணக்கானோர் வேலை வாய்ப்பை பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

திருப்பெரும்புதூரில் ஹூண்டாய் நிறுவனம் ஆலை விரிவாக்கப் பணியை மேற்கொள்ள உள்ளது. கிருஷ்ணகிரியிலும் டாடா நிறுவனம் தங்களது தொழிற் சாலையை விரிவாக்கம் செய்ய உள்ளது.

இதனால் அந்த மாவட்ட மக்களும் பயன் அடைய உள்ளனர். கோத்ரேஜ் நிறுவனம் செங்கல்பட்டில் புதிய ஆலையைத் தொடங்க உள்ளதன் மூலம் அங்கும் வேலைவாய்ப்பு பெருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக தமிழ் நாட்டுக்கு முதலீடுகள் குவிந்துள்ளதால் 40,500 பேருக்கு வேலை கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

### மாநாட்டின் சிறப்பு அம்சங்கள்

இம்மாநாடு தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் தலைமைத்துவம், அதன் நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Leadership, Sustainability and Inclusivity) ஆகிய கருப்பொருட்களை கொண்டு நடத்தப்படுகிறது. இம்மாநாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்குமான ஒரு பிரத்யேக சந்திப்பு (Buyer - Seller Meet) நடைபெற உள்ளது. அச்சந்திப்பில் பல நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்களுக்கும், உள்நாட்டு விற்பனையாளர்களுக்குமிடையேயான கலந்துரையாடல்கள் நடைபெற உள்ளன. அனுபவம் பகிர்வு உரையாடல்களும், பலதுறை சார்ந்த வல்லுநர்கள் கலந்துகொள்ளும் கருத்தரங்கங்களும் நடைபெற உள்ளன. தொழில் நிறுவனங்களின் அரங்குகள், பன்னாட்டு அரங்குகள், புத்தொழில்களு க்கான அரங்குகள் மற்றும் தமிழ்நாடு தொழில் சூழலமைப்பு அரங்கம் ஆகியவை பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார மையமும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் மேம்பட்ட தொழில் சூழல் மற்றும் மனித வளம் ஆகியவற்றை உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தி புதிய தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் இம்மாநாடு அமைந்துள்ளது.

இந்த நிகழ்வில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள், தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





நாமக்கல் மாவட்டம், பரமத்தி மற்றும் கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.92.21 லட்சத்தில் புதிய வகுப்பறை கட்டடம், ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், பொது விநியோக கடை மற்றும் புதிய அங்கன்வாடி மையம் உள்ளிட்டவற்றை திறந்து வைத்து திருச்செங்கோடு திருநகர் காலனியில் ரூ.32.50 கோடியில் திருச்செங்கோடு சங்ககிரி புதிய தார்சாலை விரிவாக்க பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில், திருச்செங்கோடு எம்.எல்.ஏ ஈ.ஆர்.ஈஸ்வரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஆட்சியர் ச.உமா தலைமை - ஈஸ்வரன் எம்.எல்.ஏ. - எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலை

# ரூ.92.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்!

நாமக்கல், ஜன. 9 -

நாமக்கல் மாவட்டம், பரமத்தி மற்றும் கபிலர் மலை ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.92.21 இலட்சம் மதிப் பீட்டில் புதிய வகுப்பறை கட்டடம், ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், பொது விநியோக கடை மற்றும் புதிய அங்கன்வாடி மையம் உள்ளிட்ட புதிய கட்டடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்து வர் ச.உமா தலைமை தாங் கினார். நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலா ளரும், நகரமைப்பு மண் டல திட்டக்குழு உறுப்பின ருமான எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலை வகித் தார்.

விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு புதிய வகுப்பறை கட்டடம், ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், பொது விநியோக கடை மற்றும் புதிய அங்கன்வாடி மையம் உள்ளிட்ட புதிய கட்டடங்களை திறந்து வைத்து பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கல்வி மற்றும் மருத் துவத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, பல்வேறு அரசு நலத்திட் டங்களை செயல்படுத்தி வருகின்றார். அரசு பள்ளி மாணவ, மாணவியர்களின் பசியினை போக்கும் வகை யில் காலை உணவுத்திட் டத்தை செயல்படுத்தி உள் ளார். அரசு பள்ளிகளுக்கு தேவையான பள்ளி கட்ட டங்கள் உள்ளிட்ட உட் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தி பள்ளிகல்வித் துறையில் மாணவ, மாண வியர்கள் தொடர்ந்து கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில் புதிய புதிய திட் டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின் றார். இதனால் தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் கல்வியில் உயர்நிலையினை அடைந்து வருகிறார்கள்.

இத்தோடு "இல்லம் தேடிக் கல்வி திட்டம்", "எண்ணும் எழுத்தும் திட் டம்","நான் முதல்வன் திட் டம்", "கல்லூரி கனவு" என மாணாக்கர்களுக்கு பல் வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின் றார். பெண் கல்வியை ஊக் குவிக்கும் விதமாக அரசு பள்ளிகளில் பயிலும் மாண வியர்களுக்கு உயர்கல்வி பயில புதுமை பெண் திட் டம் மூலம் மாதம் ரூ.1,000/ வழங்கி வருகிறார். இது போன்று இந்தியாவி லேயே வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத வகையில் பல்வேறு திட் டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகின் றார்.

ஐங்கமநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநி லைப்பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள 2 வகுப் பறை கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப் பகுதி மக்களுக்கு தேவை யான குடிநீர், சாலை வசதி, தெருவிளக்கு வசதி, கழிப் பிட வசதி, மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி அமைத் தல் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் அமைத்துதரப்படும். அர சுத்துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்க ளுக்கு, அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைப்படுத்தி, அரசின் சேவைகள் விரை வாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில், "மக்களு டன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார். இதன் மூலம் அப்பகுதி மக்களிடம் நேர டியாக சென்று கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள் ளது. அந்த மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட் டுள்ளார்கள். தற்போது நக ராட்சி பகுதிகளில் மனுக் கள் பெறப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் அனைத்து பகுதிகளிலும் மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்படும் என அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட் சித்துறையின் சார்பில், சுரங்கம் மற்றும் சிறு கனி மங்கள் நிதித்திட்டத்தின் கீழ், வில்லிபாளையம் ஊராட்சியில் ரூ.19 லட்சம் மதிப்பீட்டில் ஐங்கமநாயக் கன்பட்டி ஊராட்சி ஒன் றிய நடுநிலைப்பள்ளியில் புதியதாக கட்டப்பட் டுள்ள வகுப்பறை கட்டி டம், மேல்சாத்தம்பூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச் சித்திட்டம் - II ன் கீழ், ரூ.22.65 லட்சம் மதிப்பீட் டில் புதியதாக கட்டப்பட் டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தை யும், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பிலிக்கல்பாளை யம் ஊராட்சி, சின்ன கவுண்டம்பாளையத்தில், ரூ.12.61 இலட்சம் மதிப் பீட்டில் புதிய அங்கன் வாடி மையம், அ. குன்னத்தூர் ஊராட்சி, அய்யம்பாளையத்தில் ரூ.12.61 லட்சம் மதிப்பீட் டில் புதிய அங்கன்வாடி மையம், ஆனங்கூர் ஊராட் சியில் ரூ.13.57 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங் கன்வாடி மையம் என மொத்தம் ரூ.38.79 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட் டுள்ள 3 புதிய அங்கன் வாடி மைய கட்டடங்கள், பிலிக்கல்பாளையம் ஊராட்சி, நல்லகவுண்டம் பாளையத்தில் ரூ.11.77 லட்சம் மதிப்பீட்டில் புதிய தாக கட்டப்பட்டுள்ள பொது விநியோகக்கடை யையும் என மொத்தம் ரூ.92.21 இலட்சம் மதிப் பீட்டில் 6 முடிவுற்ற புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.பி.தன ராசு, கே.கே.சண்முகம், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் திலகவதி (பர மத்தி), ஜெ.பி.ரவி (கபிலர் மலை) உள்ளாட்சி பிரதி நிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ரூ.32.50 கோடி மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலை விரிவாக்கபணி!**

திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், திருந கர் காலனி பகுதியில் ரூ.32.50 கோடி மதிப்பீட் டில் திருச்செங்கோடு சங் ககிரி புதிய தார்சாலை விரி வாக்க பணிக்கு அடிக்கல் நாட்டு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்து வர் ச.உமா தலைமையில் நடைபெற்றது. திருச் செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வ ரன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலா ளரும், நகரமைப்பு மண் டல திட்டக்குழு உறுப்பின ருமான எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

இதில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி, பேசியதாவது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் புதிய சாலைகள் அமைத் தல், சாலை மேம்பாட்டு பணிகள், போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு திட் டங்களை செயல்படுத்தி வருகின்றார். மேலும், நெடுஞ்சாலைத் துறையின் சார்பில், ரூ.32.50 கோடி மதிப்பீட்டில் திருச்செங் கோடு - சங்ககிரி சாலை, இரு வழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் விரிவாக்கப் பணிக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. ஓம லூர் - சங்ககிரி திருச்செங் கோடு பரமத்தி சாலையா னது 81.000 கி.மீ நீளம் கொண்ட முக்கிய மாநில சாலையாகும். இச்சாலை சேலம் மாவட்டத்தில் ஓம லூர் முதல் பள்ளிபாளை யம் வரை சென்னை கன்னி யாகுமாரி தொழில் தட திட்ட அலகில் இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்ப டுத்தி மேம்பாடு செய்தல் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் சாலை மேம் பாட்டு திட்டத்தின் கீழ், திருச்செங்கோடு வட்டம், திருநகர் காலனி பகுதியில், ரூ.32.50 கோடி மதிப்பீட் டில் திருச்செங்கோடு - சங் ககிரி சாலை, பள்ளிபாளை யம் முதல் திருநகர் காலனி இரு வழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் விரிவாக்கப் பணிக்கு அடிக்கல் நாட்டி னார். ஓமலூர் - சங்ககிரி - திருச்செங்கோடு பரமத்தி சாலை கி.மீ 45/2 48/8 வரை 3.600 கி.மீ தூரத்திற்கு இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல், 3.600 கி.மீ தூரத் திற்கு மையத்தடுப்பான் அமைத்தல், 2785 மீ தூரத் திற்கு மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் தளம் அமைத்தல், 5 பெட் டிபாலங்கள் மறுசீரமைத் தல், 2 பெட்டிபாலங்கள் அகலப்படுத்துதல் மற்றும் அணுகு சாலையில் 8 சிறு பாலங்கள் அமைத்தல், கி.மீ 45/10 (பால்மடை) மற்றும் கி.மீ 47/10 (கரு வேப்பம்பட்டி)ல் பேருந்து ஒதுங்குதளம் அமைத்தல் (Bus lay bye), சாலை பாது காப்பு உபகரணங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்ப டவுள்ளது என வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருச் செங்கோடு நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ் பாபு, துணைத்தலைவர் டி.கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் வட்டூர் ஜி.தங் கவேல், மாநில வலைதள பொறுப்பாளர் திருநங்கை அ.ரியா, நெடுஞ்சாலைத் துறை கோட்டப்பொறியா ளர் திருகுணா, உதவிக் கோட்டப்பொறியாளர் தமிழரசி, உள்ளாட்சி பிரதி நிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட் பட பலர் கலந்து கொண்ட னர்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சி, 20 வது வார்டு, பொன்னுசாமி நகரில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022 ன் கீழ், ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டில், நவீன வசதி களுடன் கூடிய பொன்னுசாமி நகர் பூங்காவை, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், கும்பகோணம் மாநகராட்சி ஆணையர் இரா.லெட்சுமணன், மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவருமான குட்டி.இரா. தெட்சிணாமூர்த்தி, கும்பகோணம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஜெ.சுதாகர், மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் ஜெ.மனோகரன், மாநகர தி.மு.க. துணைச் செயலாளர் ப்ரியம் ஜெ.சசிதரன், மாவட்டப் பிரதிநிதி டி.என்.கரிகாலன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.அனந்தராமன், சி.தமிழ்ச்செல்வி, வட்டச் செயலாளர் ஸ்நேகம் ஜெ.சிவகணேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மன்னை கிழக்கு ஒன்றியத்தில் 25குடும்பங்கள் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி தங்களை ஒன்றியச் செயலாளர் ஐ.வி.குமரேசன் முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.செல்வம், ஊராட்சி மன்ற தலைவர் ஜோதிபாசு உள்ளனர்.





"எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி" திட்டத்தின் பள்ளி தூய்மை பணி செயல்பாடுகளை பூவிருந்தவல்லியில் 1931 இல் இருந்து செயல்பட்டு வரும் பார்வைத்திறன் குறைபாடுடையோர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 137 ஆண்டுகள் பழமையான கட்டடத்தில் அமைச்சர்கள் ஆர்.காந்தி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர், ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு. நாசர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், பள்ளி கல்வித்துறை முதன்மைச் செயலாளர் குமரகுருபரன், பள்ளிக் கல்வித் துறை இயக்குனர் முனைவர் க.அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குனர் கண்ணப்பன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### நீலகிரி மாவட்டத்தில் சிறுத்தை தாக்கி உயிரிழந்த

# இருவரின் குடும்பங்களுக்கு - தலா ரூ.10 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன.9 -

நீலகிரி மாவட்டத்தில் சிறுத்தை தாக்கி உயிரிழந்த இருவர் குடும் பத்திற்கு நிதி வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்ட அறிவிப்பு வருமாறு :-

**நீலகிரி மாவட்டம், ஏலமன்னா கிராமம், மேங்கோரேன்ஜ் அஞ்சல் பகுதியைச் சேர்ந்த திருமதி.சரிதா (வயது 29) என்பவர் கடந்த 29.12.2023 ஆம் தேதி அன்றும், மேங்கோரேன்ஜ் (அஞ்சல்), எஸ் டேட் தொழிலாளர் குடியிருப்பு, ஜார் கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சிறுமி நான்சி (வயது 3½) என்பவர் கடந்த 06.01.2024 அன்றும் சிறுத்தை தாக்கியதன் காரணமாக உயிரிழந் தார்கள் என்ற துயரகரமான செய் தியை அறிந்து மிகவும் வேதனைய டைந்தேன்.**

**விலை மதிப்பில்லாத இந்த இரு உயிரிழப்புகளைச் சந்தித்துள்ள குடும்பத்தினருக்கும் உறவினர்க ளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்**

**மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி யாக தலா 10 இலட்சம் ரூபாய் தமி ழக அரசின் சார்பில் வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட் டுள்ள அறிவிப்பில் கூறியுள்ளார்.

### பொங்கல் பரிசுத் தொகுப்பு

# ரூ.1000 ரொக்கம் பெற வீடு, வீடாக டோக்கன்கள் விநியோகம்!

சென்னை, ஜன.9 -

பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1000 பெறுவதற்கான டோக்கன் நேற்று முன்தினம் முதல் வீடு, வீடாக வழங்கப்படு கிறது.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை மக்கள் சிறப்புடன் கொண் டாடுவதற்காக ஆண்டு தோறும் தமிழ்நாடு அரசு சார்பில் அரிசி, சர்க்கரை, கரும்பு ஆகியவற்றுடன் பணமும் அடங்கிய பொங் கல் பரிசு தொகுப்பு வழங் கப்பட்டு வருகிறது. இந் தாண்டு பொங்கல் பண் டிகை வருகிற 15-ஆம் தேதி (திங்கட்கிழமை) கோலாக லமாக கொண்டாடப்பட உள்ளது. தைப் பொங்கலை யொட்டி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கை தமிழர் மறு வாழ்வு முகாம்களில் வசிக் கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப் பாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ.1000 ரொக்கப்பணம் வழங்கப்ப டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

இதன்படி, தமிழ்நாட் டில் 2.20 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் சிறப்பு தொகுப்பு மற்றும் ரொக் கப்பணம் ரூ.1000 வழங்கப் படுகிறது. இதற்காக நேற்று காலை முதல் நியாய விலைக் கடை ஊழியர்கள் வீடு, வீடாக சென்று டோக் கன் வினியோகத்தை தொடங்கினர். அந்த டோக்கனில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நாள், நேரம் உள்ளிட் டவை குறிப்பிடப்பட்டுள் ளது. டோக்கன் 7.1.2024 முதல் 9.1.2024 முடிய வினி யோகிக்கப்படுகிறது. 10.1.2024 (புதன்கிழமை) முதல் தமிழ்நாடு முழுவ தும் உள்ள 35 ஆயிரம் நியாய விலைக் கடைகள் மூலமாக பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட உள்ளது.

சென்னையில் பொங் கல் தொகுப்பு மற்றும் ரொக்கப்பணம் ரூ.1000 வழங்குதல் பணியை முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தொடங்கி வைக்கி றார். அதைத்தொடர்ந்து அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பொங்கல் சிறப்பு தொகுப்பு விநியோ கம் தொடங்கப்படும். மற்ற மாவட்டங்களில் அமைச்சர்கள், எம்.பி., எம். எல்.ஏ.க்கள் மற்றும் உள் ளாட்சி அமைப்புகளில் பிர திநிதிகள் தொடங்கி வைக் கின்றனர். வரும் 10ஆம் தேதி முதல் 13 வரை நியா யவிலைக் கடைகளில் பொங்கல் சிறப்பு தொகுப் பாக பச்சரிசி, சர்க்கரை, கரும்பு மற்றும் ரூ.1000 ரொக்கப் பணத்தை பெற் றுக் கொள்ளலாம். விடுபட் டவர்களுக்கு 14ஆம் தேதி வரை பொங்கல் தொகுப்பு, ரொக்கப்பணத்தை பெற்று கொள்ளலாம் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் பொங் கல் தொகுப்பு, ரொக்கப்ப ணத்தைப் பெற வரும் குடும்ப அட்டைதாரர்கள் எந்தச் சிரமமும் இன்றி பெறும் வகையில் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள் ளது. மக்கள் வெயிலில் நிற் பதை தவிர்க்கும் வகையில் சாமியானா பந்தல்கள் நியாய விலைக் கடைகளில் அமைக்கப்பட்டு வருகி றது. மேலும் கூட்ட நெரி சலை கட்டுப்படுத்த போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

பொங்கல் பரிசு தொகுப்பு முறையாக விநி யோகிக்கப்படுகிறதா என் பதை கண்காணிக்க மாவட்ட கலெக்டர்கள் மேற்பார்வையில் கண்கா ணிப்பு குழுக்கள் அமைக் கப்பட்டுள்ளது.

இதனிடையே ஒவ் வொரு மாதமும் 15-ஆம் தேதி வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை, இந்த மாதம் பொங்கலுக்கு முன்னதாக அதாவது, வரும் 10-ஆம் தேதியே 1 கோடியே 15 லட்சம் மகளிரின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க.காசிநாதன் (எ) தமிழரசன்**
**சனவரி 9 (2013)**



சிறுவயது முதற்கொண்டு கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

மாத்தூர் கிளைக் கழகச் செயலாளராக தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தினை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 06.01.2024 அன்று சென்னையில் நடைபெற்ற கேப்டன் சீனிவாசன் மூர்த்தி மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம், வைரவிழா கொண்டாட்டம் (60வது ஆண்டு நிறைவு விழா) மற்றும் பன்னாட்டு மாநாடு, ஒன்றிய அரசு ஆயுஷ் துறை இணை அமைச்சர் டாக்டர்.முன்ஞ்பாரா மகேந்திரபாய் அவர்களை சிறப்பு விருந்தினராக கொண்டு நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி.மைதிலி கே.இராஜேந்திரன், மற்றும் ஒன்றிய அரசு ஆயுஷ் துறை உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்த நாள்! காரைக்குடியில்

# துப்புரவுப் பணியாளர்கள் 40 பேருக்கு இனிப்புகள் - சீருடைகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்!

காரைக்குடி, ஜன.9-

சிவகங்கை மாவட்ட மகளிர் தொண்டர் அணி சார்பாக கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் - கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் , மாநில இலக்கிய அணிப் புரவலர் தென்னவன், காரைக்குடி நகர்மன்றத் தலைவர் முத்துதுரை, நகரச் செயலாளர் காரைக்குடி நகர்மன்றத் துணைத் தலைவர் குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் சென்னை மற்றும் தூத்துக்குடி பேரிடர் காலங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொண்ட காரைக்குடி நகரில் இருந்து சென்ற துப்புரவு பணியாளர்கள் 40 பேருக்கு கௌரவிக்கும் விதமாக அவர்களுக்கு கனிமொழி கருணாநிதி. அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இனிப்புகள் மற்றும் சீருடைகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது. மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஹேமா செந்தில் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் தெய்வானை இளமாறன், மாவட்ட மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் குழந்தை தெரசாள், சகோதரிகள் தமிழ்ச்செல்வி, ஒமேகா திலகவதி, நிர்மலா செல்வம், புகழேந்தி,மற்றும் ஜெயந்தி, தகவல் தொழில்நுட்ப அணி கலாக்காசிநாதன் எம்.சி., ஒன்றிய துணைச் செயலாளர் சகோதரி சத்யா, சுற்றுச் சூழல் அணி சகோதரி காஞ்சனா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### பொங்கல் திருநாளுக்கு முதல்வர் அளித்த ரூ.1000 பொங்கல் பரிசு:

# பெரும் நிதிச் சுமையிலும் மக்கள் மகிழ்வே பிரதானம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் !

சென்னை, ஜன.9-

பெரும் நிதிச்சுமையிலும் மக்கள் மகிழ்வே பிரதானம் என்று பொங்கல் திருநாளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த ரூ.1000 பொங்கல் பரிசு என ‘தினகரன்’ நாளேடு 7.1.2024 அன்று தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

புத்தாண்டு உதயமான நாளில் பொங்கல் தொகுப்பில் தலா ஒரு கிலோ அரிசி, சர்க்கரை மற்றும் முழு கரும்பு ஆகியவற்றை கொள்முதல் செய்து வழங்குவதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டது.

இதையடுத்து 2 கோடியே 19 லட்சத்து 57 ஆயிரத்து 402 அரிசி குடும்ப அட்டைதாரர்கள், முகாம் வாழ் இலங்கை தமிழர் குடும்பங்களுக்கு இவற்றை வழங்க ரூ.238 கோடியே 92 லட்சத்து 72 ஆயிரத்து 741 ஒதுக்கப்பட்டு நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டது.

இதில் கரும்பை பொறுத்தவரை எந்தவித இடைத்தரகர்களும் இல்லாமல் விவசாயிகளின் தோட்டத்திற்கே நேரடியாக சென்று கொள்முதல் செய்யப்படும் என்ற அறிவிப்பு வேளாண் குடிமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இதற்கிடையில் கடந்தாண்டைப் போலவே ரேஷன் கார்டு தாரர்களுக்கு ரூ.1000 பரிசுத்தொகை வழங்க வேண்டும் என்பது அரசின் பரிசீலனையில் இருந்தது. அதற்குள் வழக்கம் போல் இட்டுக்கதைகளை கட்டி மக்கள் மன்றத்தில் அரசியலாக்க முனைந்தனர் சிலர்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், “தமிழர்களின் அடையாளமாக அனைத்து தரப்பு மக்களாலும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் பெருமைமிகு பண்டிகை பொங்கல் விழாவாகும். இந்த நன்னாள் அனைத்து தொழில்களுக்கும், ஏன்? மனித குலத்திற்கே அடித்தளமாய் விளங்கி உணவளித்து வரும் விவசாய பெருங்குடி மக்களுக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளாகவும் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தகைய பெருமைமிகு பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாட ரேஷன் கடைகளில் ரூ.1000 பரிசுத் தொகையாக வழங்கப்படும். இந்த தொகையானது பொங்கல் பண்டிகைக்கு முன்பே ரேஷன் கடைகளில் ரொக்கமாக வழங்கப்படும்,” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு சார்பில் முதல்வர் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பானது ஏழை, எளிய குடும்பங்களின் மனதில் பால் வார்த்துள்ளது. அதே நேரத்தில் அரசியல் ஆதாயம் தேடமுயன்றவர்களுக்கு சவுக்கடியாகவும் மாறியுள்ளது. நடப்பாண்டில் புத்தாண்டு, பொங்கல் கொண்டாட்டங்களுக்கு நாம் ஆயத்தமாகும் முன்னரே சென்னையை உலுக்கிய புயலின் கோரமும், இதற்கடுத்த ஓரிரு நாளில் தென்மாவட்டங்களில் பெய்த பெருமழையும் எத்தனை இடையூறுகளை ஏற்படுத்தியது என்பது நாம் அனைவரும் கண்கூடாக கண்ட ஒன்று. அப்போது முதல்வரின் சீரிய நடவடிக்கைகளால் மின்னல் வேகத்தில் சுழன்றது அரசு இயந்திரம்.தமிழ் மக்களின் பாதிப்புக்கு உரிய நிவாரணத்தொகை ஒதுக்குமாறு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்தார் நமது முதல்வர். ஆனால் உரிய இழப்பீட்டுத் தொகை தருவதற்கு பதிலாக ஏளனம் மிகுந்த பதில்களே அதிகளவில் உலா வந்தன. ஆனாலும் தமிழ்நிலத்தின் தலைநகரில் கடும் புயலால் பாதித்த மக்களுக்கும், பெரும் மழையால் பாதித்த தென்மாவட்ட மக்களுக்கும் ரூ.6 ஆயிரம் நிவாரணத்தொகையை வாரி வழங்கினார் முதல்வர்.

கவலை தோய்ந்த நேரத்தில் நீண்ட அரசின் கருணைகரங்கள், இப்போது மகிழ்ச்சி கொண்டாட்டத்திற்கும் கைகளில் ரூபாய் ஆயிரத்தை வழங்கியுள்ளது. பெரும் நிதிச்சுமையிலும் மக்கள் மகிழ்வே பிரதானம் என்ற முதல்வரின் எண்ண ஓட்டத்திற்கு இது மேலும் ஒரு சான்றாக நிற்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### கேப்டன் சீனிவாசன் மூர்த்தி

# மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம், - வைரவிழா பன்னாட்டு மாநாடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜன. 9-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 6.01.2024 அன்று சென்னையில் நடைபெற்ற கேப்டன் சீனிவாசன் மூர்த்தி மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம், வைரவிழா கொண்டாட்டம் (60வது ஆண்டு நிறைவு விழா) மற்றும் பன்னாட்டு மாநாடு, ஒன்றிய அரசு ஆயுஷ் துறை இணை அமைச்சர் டாக்டர் முன்ஞ்பாரா மகேந்திரபாய் அவர்களை சிறப்பு விருந்தினராக கொண்டு நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றினார்.

அவ்வுரை பின்வருமாறு:

**வைரவிழா கொண்டாட்டம் மற்றும் பன்னாட்டு மாநாடு**

கேப்டன் சீனிவாசன் மூர்த்தி மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம், வைரவிழா கொண்டாட்டம் (60வது ஆண்டு நிறைவு விழா) தற்போது மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. இன்றும், நாளையும் மிகப் பெரிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற இருக்கிறது. இக்கருத்தரங்கில் 200க்கும் மேற்பட்ட மருத்துவ வல்லுநர்கள் தங்களுடைய ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்து இந்திய மருத்துவத்துறைக்கு தேவையான எதிர்கால வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் விவாதிக்க உள்ளனர். எனவே முக்கியத்தும் வாய்ந்த கருத்தரங்கம் தொடக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ கட்டமைப்புகள் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் அமைக்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ கட்டமைப்புகளுக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தவர்.

தமிழ்நாட்டில் 2 அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளும், 11 தனியார் சித்த மருத்துவ கல்லூரிகளும் 1 அரசு ஆயுர்வேதா மருத்துவக்கல்லூரியும், 5 தனியார் ஆயுர்வேதா மருத்துவக்கல்லூரிகளும், 1 அரசு ஹோமியோபதி மருத்துவக்கல்லூரியும், 11 தனியார் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளும், 2 அரசு 16 தனியார் யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளும், 1 அரசு யுனானி மருத்துவக் கல்லூரியும், என்று மொத்தம் 7 அரசு இந்திய மருத்துவக் கல்லூரிகளும், 43 தனியார் இந்திய மருத்துவக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன.

**சித்த வைத்தியர்களுக்கான ஓய்வூதியம் ரூ.3,000 உயர்த்தி வழங்குதல்**

அண்மையில் கூட கோவிட் பெருந்தோற்று ஏற்பட்டுள்ள காலங்களில் கோவிட் கேர் சென்டர் அமைப்பதில் சித்த மருத்துவம் ஏறத்தாழ 100க்கும் மேற்பட்ட இடங்களில் சித்தா கோவிட் கேர் சென்டர் அமைத்து பல்வேறு இடங்களில் மக்களின் உயிர் காத்த பெருமை இத்துறைக்கு உண்டு. அதேபோல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் யுனானி கேர் சென்டர், வாணியம்பாடியில் திறந்து வைத்து அதன்மூலம் ஏராளமான பொதுமக்கள் பயன்பெற்றனர். மேலும் ஒன்றிய அரசின் ஆயுஷ் துறை தமிழ்நாடு அரசு வைக்கும் நிதி தொடர்பான கோரிக்கைகள் எவ்வித தாமதமும் ஆகாமல் நிதி ஆதாரத்தை தந்துக் கொண்டிருப்பது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அந்தவகையில் ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் சர்பானந்த் சோனாவால் அவர்கள் நானும் இத்துறையின் செயலாளர் அவர்களும் டெல்லியில் அவரது இல்லத்தில் சந்தித்து இருக்கிறோம். மேலும் அவரிடம் பல கோரிக்கைகள் வைத்திருக்கிறோம். அதில் மதுரையில் உள்ள ஆயுர்வேதா கல்லூரி ஒரு பழமையான கல்லூரியாக இருக்கின்ற சூழ்நிலையில் பெரிய அளவில் மழை வந்தால் கட்டிடங்கள் சிதிலமடைந்து இருக்கும் சூழ்நிலையில் அந்த மருத்துவக் கல்லூரி கட்டிடங்களை வேறு இடத்திற்கு மாற்றி கட்டித் தர வேண்டும் என்கின்ற அக்கல்லூரி மாணவர்களின் கோரிக்கையினை ஏற்று நிதி ஆதாரத்திற்கு சம்மந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. எனவே அக்கோரிக்கையின்படி தற்போது ரூ.70 கோடி வரை நிதி ஒதுக்கப்பட்டு தற்போது கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெறவிருக்கிறது.

மேலும் பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம் என்பது ரூ.1000 தந்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இத்தொகையினை உயர்த்தி வழங்க கோரிக்கை சித்த வைத்தியர்கள் கோரிக்கையினை வைத்திருந்தனர். எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இக்கோரிக்கை கொண்டு செல்லப்பட்டது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக சித்த வைத்தியர்களுக்கான ஓய்வூதியத் தொகை ரூ.1,000லிருந்து ரூ.3,000 வரை உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு ஓய்வூதியம் தற்போது உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாட்டில் இதுவரை திறந்து வைக்கப்பட்ட சித்த மருத்துவ கட்டிட விவரங்கள்**

ரூ.45.45 கோடி செலவில், 350 இந்திய மருத்துவ முறை நிலையங்கள், சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களாக தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேலும் ரூ.16.77 கோடி செலவில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கும் 72 சித்த மருத்துவ பிரிவுகளில் உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ரூ.2 கோடி செலவில், 5 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இயங்கும் சித்த மருத்துவ பிரிவுகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் ரூ.50 இலட்சம் செலவில், செங்கல்பட்டு மாவட்டம் ஆலத்தூரில் டாம்ப்கால் நிறுவனத்தின் முதல் உற்பத்தி அலகில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி. மைதிலி கே.இராஜேந்திரன் மற்றும் ஒன்றிய அரசு ஆயுஷ் துறை உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீத்தா வேதநாயகம்
### சனவரி 9 (2019)



கழகக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு, பள்ளிப் பருவத்திலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

புதுச்சேரி மாநிலத்தில், பகுதிச் செயலாளர், துணைத் தலைவர், மாநிலக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுச்சேரி நகர்மன்ற உறுப்பினராக மூன்று முறையும் – சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுச்சேரியில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் – துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஏ. காதர்
### சனவரி 9 (2011)



இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றி வந்த இவர், 1967ஆம் ஆண்டு மண்டபம் நகரக் கழகச் செயலாளராகவும் – 1983ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டக் கழகப் பொருளாளராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்து, இறுதியில் சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

1967ஆம் ஆண்டு மண்டபம் ஊராட்சிமன்றக்குழுத் தலைவராகவும் – 1996ஆம் ஆண்டு இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவராகவும் – 1998ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல் ஆகியோர் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”யை தொடங்கி வைத்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினர். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ்.நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”யை தொடங்கி வைத்து, சென்னையில் அமைக்கப்பட்டுள்ள க்வால்காம் டிசைன் சென்டரை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”யை தொடங்கி வைத்து, காஞ்சிபுரம் மாவட்டம் பிள்ளைப்பாக்கம் சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனத்தின் Vertically Integrated Semi Conductor to PV Module தயாரிப்பு தொழிற்சாலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”யை தொடங்கி வைத்து, “தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024”யை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பீயூஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ். நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மன்னார்குடி கிழக்கு ஒன்றியத்தில் பல்வேறு கட்சிகளிலிருந்து விலகிய

# 25 குடும்பங்கள் கழகத்தில் இணைந்தனர்!

## ஒன்றியச் செயலாளர் ஐ.வி.குமரேசன் முன்னிலை

திருவாரூர், ஜன. 9- திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி கிழக்கு ஒன்றியப் பகுதியில் 25 குடும்பங்கள் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி தங்களை ஒன்றியக் கழகச் செயலாளர் ஐ.வி.குமரேசன் முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

மன்னார்குடி கிழக்கு ஒன்றியம் பாரதிமூலங்குடி ஊராட்சியைச் சேர்ந்த குடும்பங்கள் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் ஆலோசனைகளின்படி ஒன்றியக் கழகச் செய லாளர் ஐ.வி.குமரேசன் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அப்போது கழகத்தில் அனைவரையும் ஒன்றியக் கழகச் செயலாளர் ஐ.வி.குமரேசன் கழகத்தில் இணைந்த அனைவருக்கும் சால்வைகள் அணிவித்து வரவேற்றார்.

நிகழ்வில் ஊராட்சி மன்றத் தலைவர் ஜோதி பாசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.





கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி, திருவரங்குளம் மேற்கு, தெற்கு ஒன்றியக் கழகங்கள், ஆலங்குடி பேரூர்க் கழகம் சார்பில் ஆலங்குடி காந்தி பூங்காவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, ஒன்றியச் செயலாளர்கள் டி.தங்கமணி, அரு.வடிவேல், எல்.குமார், கே.எஸ்.ரவி, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், ஒன்றியப் பெருந்தலைவர் வள்ளியம்மை தங்கமணி, ஆலங்குடி பேரூர்ச் செயலாளர் ஏ.பழனிக் குமார், ஆலங்குடி பேரூராட்சி மன்றத் தலைவர் ராசி முருகானந்தம், இரத்தினவேல், கே.வி.சுப்பையா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### செஞ்சியில் விடிய விடிய கன மழை!

# செஞ்சி காந்தி பஜார் சாலையில் தேங்கிய மழை நீர்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் பணியாளர்கள் மழைநீரை வெளியேற்றினர்!

செஞ்சி, ஜன. 9 - செஞ்சியில் விடிய விடிய கன மழை பெய்து வருகிறது. செஞ்சி காந்தி பஜார் சாலையில் தேங்கிய மழை நீர் அமைச்சர்செஞ்சி மஸ்தான் முன்னிலையில் பணியாளர்கள் மழைநீரை வெளியேற்றினர்.

தென்மேற்கு வங்கக் கடல்மற்றும் தென்மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் நிலவி வரும் வளிமண்டல கீழ் அடுத்து சுழற்சி காரணமாக தமிழகத்தில் நேற்று மற்றும் நேற்று முன்தினம் செங்கல்பட்டு விழுப்புரம் கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிக கன மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் விழுப்புரம் மாவட்டம்செஞ்சி, மேல்மலையனூர் தாலுக்கா ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் மாலையிலிருந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் கனமழை பெய்து வருகிறது.

தொடர்ந்து நேற்று காலை முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதால் செஞ்சி காந்தி பஜார் சாலையில் மழைநீர் தேங்கியது.இதுகுறித்து தகவல் அறிந்த சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் செஞ்சி காந்தி பஜார் சாலையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது காந்தி பஜார் சாலையில் தேங்கிய மழை நீரை ஜேசிபி வாகனம் மூலம் பேரூராட்சி பணியாளர்கள்,தூய்மை பணியாளர்கள்மழை நீரை வெளியேற்றினர்.இதைத் தொடர்ந்து காந்தி பஜார் சாலையில் உள்ள மழைநீர் வடிய தொடங்கியது. ஆய்வின்போது செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் துப்புரவு பணி மேற்பரையாளர் செந்தில்குமார் உள்ளிட்ட தூய்மை பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# எழும்பூரில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம் : விழிப்புணர்வுப் பிரச்சாரம்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 9 - எழும்பூர் தொகுதி, வார்டு எண்.58, ராட்லர் தெரு, எஸ். ஆர்.மஹாலில் 08.01.2024, திங்கள்கிழமை அன்று மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நடைபெறுவதையொட்டி, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், மக்களுடன் முதல்வர் திட்டம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை அந்த வார்டில் தொடங்கி வைத்தார்.

மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் பின்வரும் சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் சேவைகள் துறை சார்பாக கட்டுமான வரைபடம் ஒப்புதல் வழங்குதல், சொத்து வரி, குடிநீர் வரி பெயர் மாற்றம் செய்தல், வர்த்தக உரிமம் வழங்குதல், குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்பு பெறுதல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்டவைகளுக்கான விண்ணப்பங்கள் இம்முகாமில் பெறப்படும்.

மேலும், எரிசக்தி துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, காவல் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஆதி திராவிட நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, வாழ்வாதாரக் கடன் உதவிகள் ஆகியவை தொடர்பான விண்ணப்பங்களும் பொதுமக்களிடமிருந்து இம்முகாமில் பெறப்படும்.

இச்சிறப்பு முகாம் 8.1.2024, திங்கள்கிழமை அன்று வழக்கறிஞர் இ.பரந்தாமன் அந்த வார்டைச் சேர்ந்த பொதுமக்களுக்கு இம்முகாமில் அளிக்கப்படும் சேவை களைத் தெரிவிக்கும் விதமாக, மக்களுடன் முதல்வர் திட்டம் குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வீடுவீடாகச் சென்று வழங்கிடும் பிரச்சாரத்தை சூளை நெடுஞ்சாலைசாமி பிள்ளை தெரு சந்திப்பில் தொடங்கி வைத்தார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வருகின்ற 21ஆம் தேதி நடைபெறுகின்ற கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டு பணிகளை டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பார்வையிட்டார். அப்போது கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுகவனம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர் தங்க மருதமுத்து, சேலம் ஒன்றியம் தளவாய்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ராஜா மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



# கலைஞர் : பெரியாரிய கம்யூனிஸ்ட்

■ நீரை.மகேந்திரன்

இந்தியாவில் மாபெரும் மக்கள் திரள் கொண்ட மாநிலக் கட்சியான தி.மு.கழகத்தின் தலைவராக ஐம்பதாண்டு காலம் செயல்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிந்தனையாற்றலை அறிந்து கொள்வதொன்றும் கடினமான காரியம் அல்ல. மலரின் பல்வேறு அடுக்குகளைப் போல அவர் நிகழ்த்திய செயல்கள் ஒவ்வொன்றையும் நாம் பிரித்துப் பகுத்துப் பார்க்கக் கூடியதுதான்.

அரசு ரீதியாகட்டும், ஆட்சிக்கு அப்பாற்பட்ட பணிகளாகட்டும் எந்தச் செயலிலும் அவர் பார்வை சமூக நீதி கொண்டது என்பதை, நாம் அறிந்திருக்கிறோம். அப்படியான சமூகநீதிப் பார்வையிலும் மேலும் சில நுட்பமான அடுக்குகளாக அவரிடம் திராவிட மனம் கொண்ட இடதுசாரி சிந்தனையைப் பார்க்கலாம். அவை சொற்களாக மட்டும் வெளிப்படுவது அல்ல, செயல்களாகவும் அடையாளம் காட்டக் கூடியவையாகப் பல மேம்பட்ட விளைவுகளை உருவாக்கி இருக்கின்றன.

## விவேகம் எனும் வெள்ளி முளைத்து...

2001 ஆம் ஆண்டில் அவர் இந்த வாசகத்தை முன்வைத்தார். “விவேகம் எனும் வெள்ளி முளைத்து சாதி மதப்பித்து எனும் சனி தொலைந்தால்தான் சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும்”. இந்த வாசகம் மக்கள் மத்தியில் பரவலானது. அதே ஆண்டில் ‘ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ ஏடு கலைஞரை ஒரு பேட்டி எடுக்கிறது.

அந்தப் பேட்டியில் ஒரு கேள்வி.

“உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ‘லட்சிய வெற்றி’ எதுவாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?” என செய்தியாளர் கேட்கிறார். அதற்குப் பதில் சொல்கிறார் கலைஞர்.

“ஒரு பொதுக்கூட்டத்தில் பேச்சு கேட்க வந்து, குழுமியிருப்போர் அனைவரும் தமிழர்களாக இருக்கிறார்கள். ஆனால், கூட்டம் முடிந்து கலைந்து செல்லும் போது தனித்தனி சாதிகளாகக் கலைந்து செல்கிறார்கள். அந்த நிலைமாறி தமிழர்களாகவே கூட்டத்தில் அமர்ந்து கொள்ளும் பொழுது , தமிழர்களாகவே கலைந்து செல்லும் காலம் வந்தால் அதுதான் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் எதிர்பார்க்கும் ‘லட்சிய வெற்றி’ என்பதாகும்” என்கிறார்.

அவற்றைச் சொற்களாகப் பார்க்காமல், செயல்களாகப் பார்ப்பதெனில், அவர் தனது எண்பதாவது அகவையில் இருக்கும்போது மட்டுமல்ல, 1944 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற இருந்த வர்ணாசிரமக் கூட்டத்தைக் கண்டித்து, தனது இருபதாவது வயதில் துண்டு அறிக்கை எழுதியவர். அப்போதே அவரின் தரமான செய்கைதான் ‘ஒரே ரத்தம்’ நாடகம். அந்த நாடகம்தான் பின்னாளில் திரைப்படமாக வெளிவந்து, வெற்றி பெற்றது.

## நவீன போர்க் கலை!

சாதி, சமய, வேறுபாடு அற்ற சமத்துவச் சமுதாயம் காண வேண்டும் என்கிற தீராத வேட்கை எங்கிருந்து வந்தது? குறிப்பாக சிக்கலான இந்திய சமூகத்தில் அதை எப்படி நிகழ்த்திக் காட்டுவது என்பதையும் கலைஞரிடமிருந்து கற்றுக்கொள்வது நவீன போர்க் கலையாகும்.

தாழ்த்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்களுக்கும் 1989 ஆம் ஆண்டில் தென் தமிழகத்தில் ஒரு பிரச்சினை உருவானது. கலவரமாக மாறியது. இவர் அந்தச் சூழலை முடிவுக்குக் கொண்டுவர, அப்போது நடைபெற இருந்த அமைச்சரவைக் கூட்டத்தையும் ரத்து செய்துவிட்டு, தென் மாவட்டங்களுக்கு நேரில் சென்று நிலைமையைச் சீராக்கினார்.

சிறுபான்மையினர் நலன், தாழ்த்தப்பட்டவர்கள் நலன் என்கிற நோக்கங்களில் உறுதியாக நின்ற அவர், அந்த நோக்கத்தின் தொடக்கக் கால, வேகத்தைப் போலவே இறுதி காலகட்டத்திலும் இருக்கிறார். ஒரு பேட்டியில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்கள் கலைஞரின் செயல்களை நினைவு கூர்ந்தார்.

“ஐந்து சென்ட் மனைப்பட்டா வழங்கவேண்டும், இந்திரா குடியிருப்பில் ஒன்றரை லட்ச ரூபாயில் வீடு என்பதை நிதியை அதிகப்படுத்த வேண்டும், பஞ்சமி நிலங்களை மீட்க குழு அமைக்கவேண்டும் என்றெல்லாம் தீர்மானங்கள் நிறைவேற்றி, அவரிடம் அளித்தோம். அதேபோல், மறைமலை நகரில் நடந்த விழாவில் கலந்துகொண்ட கலைஞர், பஞ்சமி நிலங்களுக்காக ஒரு கமிஷன் நியமித்தார்” எனக் குறிப்பிடுகிறார். ‘இட ஒதுக்கீடு’, ‘சமத்துவபுரம்’ என எல்லாவற்றையும் குறிப்பிட்டோமெனில், கலைஞரின் ஆட்சிக் காலங்கள் எல்லாம், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட பட்டியல் மக்களின் மீட்சிக் காலமாக உருப்பெறும்.

## நேருவுக்குப் பின்னர்

அவர் அடிக்கடி ‘நானும் ஒரு கம்யூனிஸ்ட்டுதான்’ என மேடைகளில் பேசுவார். அது மேடைப் பேச்சுக்காக மட்டுமல்ல, தனது ஆட்சிக் காலத்தில் கூடுமானவரை சோசலிச ஆட்சித் திட்டத்தின் கூறுகளை சின்னச் சின்ன முயற்சிகள் செய்து பார்த்திருக்கிறார். இந்தியாவில் ஜனநாயக முறையில் சோசலிச பாணி ஆட்சிக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என ஆசைப்பட்டவர், முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு.

பல பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கியதுடன், ஐந்தாண்டு திட்டம் என்கிற சோசலிச பாணியிலான வளர்ச்சி இலக்கினை முன்வைத்தும் செயல்படுத்தினார். அவருக்குப் பின்னர் தமிழ்நாட்டில், சோசலிஸ்ட்டு அரசு பாணியிலான ஒரு முன்னெடுப்பில், தனது ஆட்சியின் தொடக்கக் காலத்தில் திட்டக்குழு அமைத்தவர், நான்காவது ஆட்சிக் காலத்தில் செய்து பார்த்த முயற்சிதான் உழவர் சந்தைகள். 1999 ஆம் ஆண்டு உழவர் சந்தைகளைத் தொடங்கி வைத்தார்.

விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் விளைவிக்கும் காய்கறிகள், பழங்கள், தேங்காய் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களை இடைத்தரகர்கள், வியாபாரிகள் குறுக்கீடு ஏதும் இல்லாமல் நேரடியாக மக்களுக்கு விற்பனை செய்யும் வகையில், உழவர் சந்தைத் திட்டம் தொடங்கப்பட்டது. இப்போதுவரை அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது பயனளித்துக் கொண்டிருக்கிறது.

**தான் ஒரு கம்யூனிஸ்ட் என அவர் குறிப்பிடுவது அரசியல் கணக்கு அல்ல, அது திட்டங்களின் கணக்கிலிருந்து எனச் சொல்வதற்கு பல குறிப்புகள் இருக்கின்றன.**

உழவர் சந்தைக்குச் செல்லக்கூடிய காலை நேரப் பேருந்துகளில் விவசாய மக்கள் பொருட்களை வைப்பதற்காக இருக்கைகள் அகற்றப்பட்டு இடம் ஒதுக்கப்பட்டன . சில இடங்களில் இருக்கைகளுக்கு பதில் சுமை தாங்கும் கம்பிகள் பொருத்தப்பட்டன . குறிப்பாக, உழவர் சந்தைக்குச் செல்லக்கூடிய உழவர்களுக்குப் பயணச்சீட்டும் விலை இல்லாமல் அளிக்கப்பட்டது. இப்படி ஒவ்வொன்றுக்கும் எளிய தீர்வுகள் மூலம் உழவர் சந்தையை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டினார்.

அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க, அவர் தேர்ந்தெடுத்த நாள் என்ன தெரியுமா?

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதி. அதாவது சோசலிச முறையிலான திட்டங்களை இந்தியாவில் முன்னெடுத்த நேரு அவர்களின் பிறந்த நாள்.

நேரு அவர்களைப் போலவே கூட்டுறவுத் துறையை அவர் செழுமைப்படுத்திய விதம், கூட்டுறவுத் துறைத் தேர்தல்களை முறையாக நடத்துவது ஆகியவை கலைஞர் ஆட்சி காலத்தில்தான் எந்த விதமான தயக்கமும் இன்றி நடைபெற்றிருக்கின்றன.

தான் ஒரு கம்யூனிஸ்ட் என அவர் குறிப்பிடுவது அரசியல் கணக்கு அல்ல, அது திட்டங்களின் கணக்கிலிருந்து எனச் சொல்வதற்கு பல குறிப்புகள் இருக்கின்றன.

## சமதர்மம் பெரியார்

பெரியார் சுயமரியாதை சமதர்மம் என்கிற நூலின் முன்னுரையில் பேராசிரியர் ந.முத்துமோகன், பெரியாரிய மார்க்சிய பார்வை எப்படியானது எனக் குறிப்பிடுவார்.

“பெரியாரிய பார்வையில் சமதர்மம் என்பது அறியப்பட்ட மார்க்சியத்தில் இருந்து வேறுபடுகிறது. குறிப்பாக பெரியாரின் சமதர்மம் என்பது பொருளாதாரப் பொதுவுடைமையை மட்டும் குறிக்கவில்லை . சாதி, மதம், கடவுள், ஆண், பெண் பெயரால் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வு நீங்கிய நிலையே என பெரியார் குறிப்பிடுகிறார்.

பொருளாதாரத்தை மட்டும் முழுக்க முழுக்க முன்னிலைப்படுத்தாத சமத்துவம் என்கிறார். வாழ்வின் பல்வேறு அளவுகோல்களின்படியும் சமத்துவம் கோரும் சமதர்மம் அது” எனக் குறிப்பிடுகிறார் . அதாவது பெரியார் முன் வைக்கும் திராவிடக் கூறுகள் கொண்ட இடதுசாரிப் பார்வை என்பது பொருளாதார அளவுகோல்கள் மட்டும் கொண்டதல்ல. பூர்வீக மார்க்சியத்தில் இருந்து வேறுபட்டுப் பல்வேறு அளவுகள் கொண்ட சமதர்மம் என மாறுகிறது.

பெரியாரின் இந்தப் பார்வைதான், பேரறிஞர் அண்ணாவின் பயணமாகிறது. பிறகு பெரியாரின் மார்க்சிய அணுகுமுறையை தமிழ்நாட்டில் செயல்படுத்திப் பார்த்தவர் கலைஞர். அதாவது கலைஞர் பெரியாரிய கம்யூனிஸ்ட்.

---

## திராவிட இயக்க இதழ்கள் - கழகக் குரல்




திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரான சொக்கலிங்கம் சிட்டிபாபு அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இதழ் ‘கழகக்குரல்’.

1974 ஆம் ஆண்டு தி.மு.க. வெள்ளி விழாவையொட்டி தொடங்கப்பட்ட வார இதழ் இது. படத்தில் காண்பது 1975 ஆம் ஆண்டின் சிறப்பு மலர். பேரறிஞர் அண்ணாவின் உரைகளை மக்களிடம் பரவலாகக் கொண்டு சென்ற இதழ்களில் மிக முக்கியமான இதழ் இது.

நெய்வேலி சுப்பிரமணியன் என்பவர் 1974 செப்டம்பர் 29 தேதியிட்ட இதழில் பேரறிஞர் அண்ணா மற்றும் அமெரிக்க முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கன் ஆகியோரின் குணாதிசயங்களை ஒப்பிட்டு ஒரு துணுக்கு எழுதியுள்ளார்.

“...‘துப்பாக்கி ரவையைவிட ஓட்டுச் சீட்டுதான் வலிமையானது’ என்று முழங்கியவர் ஆப்ரகாம் லிங்கன். ‘மக்கள் குரலே மகேசன் குரல்’ என்று முழங்கியவர் அண்ணா

ஆபிரகாம் லிங்கன் ஏழைக் குடிசையில் பிறந்தவர். அண்ணாவும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். ஆப்ரகாம் லிங்கன் இரவு முழுவதும் புத்தகங்கள் படிக்கும் குணமுள்ளவர். அண்ணா விடிய விடிய புத்தகங்களைப் படிப்பவர்.

ஐம்பது மைல் சுற்றுவட்டாரத்தில் படிக்காத புத்தகங்களே இல்லை என்று பெருமை பெற்றவர் ஆப்ரகாம் லிங்கன். மிகப்பெரிய, பல்லாயிரக்கணக்கான நூல்களைக் கொண்ட கன்னிமாரா நூலகத்தையே கரைத்துக் குடித்தவர் என்று பெயர் பெற்றவர் அண்ணா...” என்று போகும் அந்தத் துணுக்கு இப்படி முடிகிறது:

‘ஆப்ரகாம் லிங்கன் பிறந்தது - 1809! அண்ணா பிறந்தது 1909!’

---

## ஃப்ளாஷ்பேக்



## தமிழ்நாட்டுக்கு மும்பை நிதி!



சேசுராசு

1996 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு முழுக்க கழக உடன்பிறப்புகள் தேர்தல் நிதி அளிக்கும்படி தலைவர் கலைஞர் அறிவித்தார். அப்போது மும்பை தி.மு.க சார்பில் ரூ.2 இலட்சம் தேர்தல் நிதியை அன்றைக்கு மாநிலச் செயலாளர் த.மு.பொற்கோ அவர்கள் தலைவர் கலைஞர் கைகளில் வழங்கினார். பேராசிரியர், ஆற்காட்டார் ஆகியோர் அருகில் இருந்தார்கள். அப்போதைய இளைஞர் அணி அமைப்பாளராகிய நானும் உடனிருந்தேன்.

**-மும்பை சேசுராசு, மாநில இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், மும்பை தி.மு.க.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

---


## கருவூலம்

### சுவரொட்டிகள் ஒட்டிய அண்ணா!

**1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சென்னை கொத்தவால்சாவடி பகுதியில் பேரறிஞர் அண்ணா பொதுக்கூட்டத்தில் பேச திட்டமிடப்பட்டிருந்தது. கூட்டத்துக்காக 100 சுவரொட்டிகளைக் கடன் சொல்லி அச்சடித்துவிட்டார்கள். ஆனால், ஒட்டுவதற்கு கூலி கொடுக்க யாரிடமும் பணம் இல்லை. அதனால், என்.வி.என். நடராசன் போஸ்டரையும், ‘நம் நாடு’ சிவஞானம் பசை வாளியையும், தேவராசன் ஏணியையும் எடுத்துக் கொண்டனர். அண்ணாவும், டி.வி.முருகேசனும் பசை தடவி சுவரொட்டிகளை ஒட்டினர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 354




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131